# விக்னேஸ்வரன் மீது நம்பிக்கை இல்லை; 21 உறுப்பினர்கள் ஆளுநரிடம் கடிதம்

பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 01,வியாழக்கிழமை 15.06.2017 கதிர் 221

# இரு அமைச்சர்களுக்கு கல்தா; மற்றிருவருக்கும் கட்டாய லீவு!

## சபை அமர்வில் நேற்று விக்கி அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை அறிக்கையின்படி, குற்றம் இழைத்தவர்கள் எனக் கூறப்படும் கல்வி அமைச்சர் ரி.குருகுலராஜா, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகிய இருவரையும் இன்று மதியத்துக்கு முன்னர் பதவி விலகும்படி கோரியுள்ள முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மற்றைய இரு அமைச்சர்களையும் தாம் ஒரு மாத கட்டாய விடுமுறையில் அனுப்புகின்றார் என்றும் அறிவித்தார். பக்கம் 03 »

## எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து தமிழரசுக் கட்சியினர் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

நேற்று வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் விடுத்த அறிவிப்பை அடுத்து அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கின்றது இலங்கைத் தமிழரசுக் கட்சி.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஐந்து மாகாண சபை உறுப்பினர்களுடன் சேர்த்து மொத்தம் 21 பேரின் பெயருடன் நேற்றிரவு ஆளுநரை நேரில் போய்ச் சந்தித்தனர் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள். பக்கம் 18 »

## கடிதத்தில் 15 பேரே கையெழுத்திட்டனர் எஞ்சிய ஆறு பேர் இன்று ஒப்பமிடுவராம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

முதல்வர் விக்னேஸ்வரன் மீது தமக்கு நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்து தமிழரசுக் கட்சியினர் நேற்றிரவு ஆளுநரிடம் சமர்ப்பித்த கடிதத்தில் 21 மாகாண சபை உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கியிருந்தன. ஆனால் அவர்களில் 15 பேரே அக்கடிதத்தில் ஒப்பமிட்டிருந்தனர். எஞ் பக்கம் 18 »

## பெரும்பான்மையை நிரூபிக்குமாறு முதலில் விக்கியைக் கேட்பார் ஆளுநர்

### அதன் பின்பே அடுத்த கட்ட முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 15

முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் மீது நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்து வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் 21 பேரின் பெயர்கள் குறிப்பிட்டு, சத்தியக் கடதாசிகளுடன் கடிதம் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றமையை நேற்றிரவு 'காலைக்கதிரு'க்கு உறுதிப்படுத்தினார் வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே. பக்கம் 18 »

## முதல்வரின் முடிவு; ரெலோ வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு மாகாண முதலமைச்சரின் முடிவை ரெலோ வரவேற்றிருக்கின்றது.

இதுதொடர்பில் ரெலோவின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா நேற்று மாலை அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

வட மாகாண சபை பக்கம் 18 »

## எதிர்பார்க்கப்பட்டபடியே தமிழரசுக் கட்சி வெளிநடப்பு

### எதிர்க்கட்சித் தலைவரும் வெளியேறினார்

யாழ்ப்பாணம், ஜூன் 15

நேற்று வடக்கு மாகாண சபை அமர்வின்போது எதிர்பார்க்கப்பட்டபடி வெளிநடப்பு அத்தியாயங்கள் அரங்கேறின.

அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டு அறிக்கை குறித்து ஆராய்வதற்கான சபையின் அமர்வு நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

முதலில் விவசாய பக்கம் 18 »

## முதல்வரின் ஒரு முடிவு சரி மற்றது பிழை

### எதிர்க்கட்சித் தலைவர் தவராசா விளக்கம்



யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்குமாகாண அமைச்சர்களுக்கு எதிராக முதல்வர் விக்னேஸ்வரன் எடுத்த முடிவுகளில் ஒன்று சரியானது; மற்றையது தவறானது பக்கம் 18 »

## கட்டாய விடுமுறையில் அமைச்சர்களை அனுப்புவதற்கு இடமே இல்லையாம்!

யாழ்ப்பாணம், ஜூன் 15

மாகாண சபையின் ஒரு அமைச்சர் நாட்டிலும், பதவியிலும் இருக்கத்தக்கதாக அவரைக் கட்டாய விடுமுறையில் அனுப்பும் ஏற்பாடோ -

அல்லது அந்த அமைச்சுப் பொறுப்பை இன்னொருவர் (முதலமைச்சர் உட்பட பிறிதொரு அமைச்சரோ) கையாளும் நடைமுறையோ --

சட்டத்தில் இருப்பதாகத் தெரியவில்லை என்று நாடாளுமன்றம் மற்றும் உள்ளூராட்சிக் பக்கம் 18 »

## குற்றம் சுமத்தப்பட்டவர்களை காப்பாற்ற முயல்கின்றீர்களா?

### மாவை, சுமந்திரனிடம் சுரேஷ் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 15

குற்றவாளிகளையும், குற்றஞ் சாட்டப்பட்டவர்களையும் காப்பாற்றவா தமிழ் மக்கள் தமக்கு வாக்களித்தார்கள் என்பதைத் தமிழரசுக்கட்சி தலைவர் மாவை. சேனாதிராசாவும், நாடாளுமன்ற பக்கம் 18 »

## அடுத்த முதல்வர் இன்று முடிவு!

### தமிழரசுக் கட்சி செயலர் யாழ்.விரைவு

யாழ்ப்பாணம், ஜூன் 15

இலங்கைத்தமிழரசுக் கட்சியின் சார்பில் அடுத்த முதல்வர் பதவிக்கு யார் நிறுத்தப்படுவார்கள் என்பது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று தீர்மானிக்கும் என கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா நேற்றிரவு 'காலைக்கதிரு'க்குத் தெரி பக்கம் 18 »

## ஐங்கரநேசன் தன்னிலை விளக்கம்



யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்குமாகாணசபையின் நேற்றைய அமர்வின் போது, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தன்னிலை விளக்கமளித்தார்.

தமக்கு எதிரான ஒவ்வொரு குற்றச்சாட்டுக் குறித்தும் விவரித்த அவர், அவை ஒவ்வொன்று பக்கம் 18 »

## சிவஞானமா? அல்லது டாக்டர் சத்தியலிங்கமா?

### முடிவு மாவையின் கையில்

யாழ்ப்பாணம், ஜூன் 15

விக்னேஸ்வரனுக்கு மாற்றீடாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது புதிய முதல்வராக தற்போதைய சபை முதல்வர் சி.வீ.கே. சிவஞானம் அல்லது தற்போதைய சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கத்தை நிறுத்தும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் பக்கம் 18 »

## அறிக்கை பற்றிய விவாதத்துக்கு 20 லட்சம் ரூபா வரை செலவு

வடமாகாண அமைச்சர்கள் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து விவாதிப்பதற்காக நடத்தப்பட்டுள்ள அமர்வுகளுக்காக 20 லட்சம் ரூபாவரை செலவிடப்பட்டுள்ளதாக அவை தலைவர் சி.வீ.கே.சிவஞா பக்கம் 18 »

## மாங்குளத்தில் 1000 ஏக்கரில் பொருளாதார வலயம்!

### 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமாம்



யாழ்ப்பாணம், ஜூன் 15

மாங்குளத்தில் ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணப் பரப்பில் பொருளாதார வலயம் ஒன்று, மூன்று பக்கம் 18 »

### அளப்ப அருணாசலம்



யார் விரிச்ச வலையிலை ...

யார் விழப்போகினம்...?

## ரெலோவின் முடிவுக்கு மாறாக டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூன் 15

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் நேற்றைய அறிவிப்பை தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) முழுமையாக ஆதரித்துள்ள போதிலும் --

அக்கட்சியைச் சேர்ந்த வரான மாகாணப் போக் பக்கம் 18 »

## கட்சிச் செயலரின் கடிதமே முதல்வரைத் தீர்மானிக்குமாம்!

யாழ்ப்பாணம், ஜூன் 15

மாகாண சபையில் ஆட்சியிலிருக்கும் ஒரு கட்சியின் சார்பில் யார் முதலமைச்சராகப் பணியாற்ற வேண்டும் என்பதை அக்கட்சியின் செயலாளர் உறுதிப்படுத்தி வழங்கும் கடிதமே தீர்மானிக்கும் எனத் தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயினும், ஒருவர் முதலமைச்சராகப் பதவி வகிக்கும் போது, இன் பக்கம் 18 »

# மக்களுக்கு நியாயமான சேவைகள் கிடைக்க வடமாகாண சபை செயற்பட வேண்டும்

## வலியுறுத்துகிறார் மஸ்தான் எம்.பி.



வவுனியா, ஜூன் 15

மக்களின் சேவைகளை நியாயமாகவும் நேர்மையாகவும் கிடைப்பதற்குரிய வகையில் வடமாகாண சபையின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான கே.கே. மஸ்தான் தெரிவித்தார்.

அவரின் ஏற்பாட்டில் மூவின மக்களுக்கும் இலவச கண் சிகிச்சை முகாம் வவுனியாவில் நேற்று இடம் பெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வட மாகாண சபை மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் எமது மக்களின் பெரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட ஒன்று. எனினும் இப் பொழுது மாகாண சபைக்குள் என்ன நடைபெறுகின்றது என்று விளங்கவில்லை .

வட மாகாணசபையில் ஊழல்கள் காணப்படுமாக இருந்தால் மக்களுக்கு யாரை மக்கள் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுப்பது என்ற கேள்வி ஏற்படும். மக்கள் பிரதிநிதிகள் இழைக்கும் தவறுகளுக்கு மக்களின் தேர்வுகளில் பிழை என்பதை வட மாகாண சபை நிரூபித்து விடாமல் மக்கள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிய மாகாண சபையாக இருப்பதற்கான வழி வகைகளைத் தேடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இன்று ஊழலை விசாரிக்கும் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு அதில் சில குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளனர். ஆனால் அது தொடர்பில் எங்களுக்குத் தெரியவில்லை. ஆனாலும் நாங்கள் நேர்மையான அரசியல் தன்மைகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும் என்று வட மாகாண சபையிடம் எதிர்பார்க்கின்றோம்.

இதுவரை எவ்வாறு நடந்ததோ தெரியாது. இனி வரும் காலங்களிலாவது மக்களின் சேவைகளை நியாயமாகவும் நேர்மையாகவும் கிடைப்பதற்குரிய வகையில் உங்கள் செயற்பாடுகளை அமைத்துக் கொண்டால் சிறப்பாக இருக்கும்.

இது தவிர, அண்மைக் காலமாக நாட்டில் இடம் பெறும் வன்முறைகளைப் பார்க்கும் போது நாட்டுக்கே உரித்தான சட்டம் தமது கடமையைச் சரிவரச் செய்வதாகத் தெரியவில்லை என்றே தோன்றுகிறது. இதனால் இந்த நல்லாட்சியின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை சிறுபான்மையினர் இழந்து வருகின்றனர்.

கடந்த ஆட்சியை நாம் வீட்டுக்கு அனுப்பி சிறுபான்மையினரிடம் பிரசாரம் செய்து இந்த ஆட்சியை கொண்டு வந்தோம். எனினும் இந்த ஆட்சியிலும் அதே நிலை தொடர்வதால் மக்கள் குறிப்பாக முஸ்லிம்கள் கேட்கும் கேள்விகளுக்கு எம்மால் பதில் கூற முடியாமல் இருக்கின்றது.- என்றார். (எ-100)

## தமிழ்மொழியில் வகுப்பு நடத்திய சந்திரிகா




கொழும்பு, ஜூன் 15

தான் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் ஜனாதிபதி மாளிகையில் தமிழ்மொழியில் வகுப்புகளை நடத்தச் செய்தார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் அதிகளவில் தமிழ் மொழியை கற்றுக்கொள்ள முடிந்தது என அவர் கூறியுள்ளார்.

காலி, மாபலகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

## மஸ்தான் எம்.பியின் ஏற்பாட்டில் இலவச கண் சிகிச்சை முகாம்!



வவுனியா, ஜூன் 15

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தானின் ஏற்பாட்டில் மூவின மக்களுக்கும் இலவச கண் சிகிச்சை முகாம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா மூன்று முறிப்புப் பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சிகிச்சை முகாமில் வவுனியா, மன்னார், மதவாச்சி, திருகோணமலை, அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றிருந்தனர். பாகிஸ்தானைச் சேர்ந்த வைத்தியரால் மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-100)

## ஜனாதிபதிக்கு சூனியம் வைத்ததாக நம்பப்படும் செப்புத் தகடுகள் மீட்பு!



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சூனியம் செய்ததாக நம்பப்படும் இரண்டு செப்புத் தகடுகள் இளைஞர்களால் மீட்கப்பட்டுள்ளன என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் வெளியிட்ட தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அனுராதபுரம் - பதவிய - கெப்பற்றிக் கொல்லாவ பிரதான வீதிக்கு அருகில் உள்ள உஸ்கல்ல மயானத்தில் இருந்தே இந்தச் செப்புத் தகடுகள் மீட்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவின் சகோதரர்கள் மூவர் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் ஒருவர் ஆகியோருக்கு எதிராக இவ்வாறு சூனியம் செய்ததாக நம்பப்படுகிறது. அவர்களின் பெயர்கள் தகடுகளில் எழுதப்பட்டுள்ளன.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் யாரோ ஒருவருடைய தேவைக்கு அமைய சூனியம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய சூனியம் செய்தவரால் 10 அடி நீளத்திலான தகட்டில் செங்குத்தாக 6 பேரின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

அதில் பெயர்கள் எழுதப்பட்டு கிடைமட்டமாக ஜனாதிபதியின் உருவம் போன்று வரையப்பட்டு அதற்கு இரண்டு பக்கங்களிலும் பெயர் எழுதப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி அணியும் ஆடையை போன்று அடை அணிந்திருந்தார்.

அதற்கமைய சூனிய தகட்டில் அந்த உருவம் வரையப்பட்டுள்ளது.- என்றுள்ளது.

## பெரும்பான்மையினர் சகல இனங்களையும் அரவணைத்துச் செல்கின்றமை அவசியம்!

### இவ்வாறு கூறுகிறார் கல்வி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் பெரும் பான்மையினர் என்று தங்களை அடையாளப்படுத்துகின்றவர்கள் அனைத்து இனத்தையும் அரவணைத்துக் கொண்டு சென்றால் மாத்திரமே இந்த நாட்டின் பெறுமதியையும் அபிவிருத்தியையும் மிக விரைவாக அடைய முடியும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் கல்வித் தரத்தை உயர்த்தும் வேலைத். திட்டத்தின் கீழ் 108 ஆசிரிய மத்திய நிலையங்களின் நிலைய முகாமையாளர்களுக்கும், 19 ஆசிரிய கல்வியியல் கல்லூரிகளின் ஆசிரிய கலாசாலைகளுக்குமாக 127 மடிக்கணினிகள் நேற்று கொழும்பில் கல்வி அமைச்சின் கேட்போர் கூட மண்டபத்தில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கல்வி அமைச்சு கல்வியின் தரத்தை உயர்த்தும் முகமாக தற்போது பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதன் ஒரு பகுதியே இன்று வழங்கப்படுகின்ற 127 மடிக் கணினிகள். இவற்றை இலவசமாக வழங்கி வைப்பதற்குக் காரணம், இவற்றை ஆசிரியர்கள் பயன்படுத்தி அவற்றை மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்பதே. எனவே எதிர் காலத்தில் நாங்கள் அனைத்துப் பாடசாலைகளுக்கும் அறிமுகம் செய்யவுள்ள நேர்த்தியான வகுப்பறை அல்லது ஸ்மாட் வகுப்பறை என்று சொல்லப்படுகின்ற வகுப்பறையின் ஓர் ஆரம்பமாகவே இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

நாட்டில் தற்போது மூவின மக்களுக்கும் பிரச்சினை இருக்கின்றது. எனவே, இந்தப் பிரச்சினை அனைத்தும் சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும். அப்படிச் செய்யாவிடில் இந்த நாட்டை அபிவிருத்தி அடையச் செய்ய முடியாது.

சிங்கப்பூர் நாட்டை இன்று எல்லோரும் அபிவிருத்திக்கு உதாரணமாகச் சொல்கின்றார்கள். அதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய நாட்டில் இன, மத, மொழி பாகுபாடு இல்லை. அதன் காரணமாக அவர்கள் மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளார்கள்.

அவர்களுக்கு அதனைச் செய்ய முடியுமானால் ஏன் எங்களுக்கு அவ்வாறு செய்ய முடியாது. எனவே நாங்களும் அவ்வாறு செயற்பட வேண்டும். இதனை இங்கிருக்கின்ற பெரும்பான்மை சமூகம் உணர வேண்டும். அவர்கள் உணராத வரை இதற்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாது.-என்றார். (எ)

காலைக்கதிர்
வியாழக்கிழமை 15.06.2017 

# முதல்வர் மீது நம்பிக்கையீனம்; கடிதம் ஆளுநரிடம் ஒப்படைப்பு



முதல்வர் விக்கினேஸ்வரன் மீது நம்பிக்கை இல்லை எனத் தெரிவிக்கும் கடிதத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சி.வீ.கே.சிவஞானம் நேற்றிரவு ஆளுநர் றெஜினோல்ட் குரேயிடம் கையளித்தபோது...

## கடிதத்தில் ...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

குக் குறையாத உறுப்பினர்களின் - பலமும் ஆதரவும் தமக்கு உள்ளது என்பதை மாற்றுக் குழுவினர் ஆளுநரைத் திருப்திப்படுத்தினால் மட்டுமே அவர் தற்போதைய முதல்வரைத் தமது பெரும்பான்மையைச் சபையில் நிரூபிக்கும்படி கோருவார் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ)

## விக்னேஸ்வரன் ...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

அதனையடுத்து தமிழரசுக் கட்சியின் அவைக் குழுத் தலைவரான அரியரத்தினம் தலைமையில் 15 பேர் கொண்ட குழுவினர் ஆளுநரின் உத்தியோகபூர்வ இலத் துக்குச் சென்று அவரைச் சந்தித்தனர்.

இந்தக் குழுவில் மாகாண சபையின் 15 உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மட்டுமன்றி எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அவர்களில் இடம்பெற்றிருந்தனர்.

அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் முதல்வர் விக்னேஸ்வரன் மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை. சபையில் பெரும்பான்மையினரின் ஆதரவை அவர் இழந்துவிட்டார் எனச் சுட்டிக்காட்டினர்.

விக்னேஸ்வரன் மீது தமக்கு நம்பிக்கை இல்லை எனத் தெரிவிக்கும் மேற்படி உறுப்பினர்களின் கடிதத்தில் அதற்கான காரணங்கள் குறிப்பிடப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், அதற்கான காரணங்கள் அடங்கிய விளக்கத்தைத் தமக்குத் தனியாக அனுப்பிவைக்கும்படி சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிடம் கோரினார். இக்குழுவினர் முதல்வர் மீதான நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தும் தமது கடிதத்தை ஆளுநரிடம் ஒப்படைத்துச் சென்ற பின்னர் இரவு 9.30 மணியளவில் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆளுநரின் இல்லத்துக்குச் சென்று அவரைச் சந்தித்துப் பேசினார். (உ)

## கட்சி...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் இவ்விடயத்தில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சிவஞானம் எடுத்த ஒரு முன்னைய முடிவு இப்போது அவரது அணியினருக்கு எதிராகத் திரும்பலாம் எனச் சில வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராகப் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தவராசா விளங்குகின்றார்.

அவரை அந்தப் பதவியிலிருந்து விலக்கும் கடிதம் ஒன்றை அந்த அமைப்பின் - பொ.ஐ.முன்னணியின் - பொதுச்செயலாளர் துமிந்த திஸநாயக்கா சமர்ப்பித்தபோது வடக்கு அவைத் தலைவர் அதனை ஏற்க மறுத்து நிராகரித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தாம் சந்தித்து, அவர்களின் கருத்துக்களை உள்வாங்கி, அந்த உறுப்பினர்களில் அனேகரின் ஆதரவைப் பெறும் வரையே எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிப்பார் என்று கூறி அதன்படி செயற்பட்டவர் அவைத் தலைவர் சிவஞானம்.

ஆக, முதல்வர் பதவி விடயத்திலும் விக்னேஸ்வரனுக்கு மாற்றாக சிவஞானத்தின் பெயரையோ, சத்தியலிங்கத்தின் பெயரையோ இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் துரை ராஜசிங்கம் சமர்ப்பித்தால், அது விடயத்திலும் ஆளுநர் - முன்னர் அவைத் தலைவர் சிவஞானம் பதலளித்தமை போன்று - பதிலளிக்கலாம்; செயற்படலாம் - என்று கூறப்படுகின்றது.

அவையில் உள்ளோரின் நம்பிக்கையைப் பெறும் உறுப்பினருக்கு நான் முதலமைச்சர் பதவியை அறிவிப்பேன் என்று கூறி அது தொடர்பில் தம்பாட்டில் அவர் நடவடிக்கை எடுக்கலாம். - கட்சிச் செயலாளரின் சிபாரிசுக் கடிதத்தை ஒதுக்கலாம் - என்றும் கூடக் கூறப்பட்டது. (உ)

## இரு அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மேற்படி விடயம் தொடர்பாக நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் கூட்டத்தின் போதே இந்தப் பணிப்புரையை தமது உரையில் விடுத்தார் முதல்வர் விக்னேஸ்வரன்.

நேற்றுப் பகல் சபை முதல்வர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் கூடிய அமர்வின் இறுதியில் தமது முடிவை முதல்வர் அறிவித்தார்.

அந்த உரையில் அவர் கூறியவை வருமாறு :-

அமைச்சர்களாகிய நாம் உரிய பயிற்சியுடன் இந்தப் பதவிக்கு வரவில்லை. சட்டங்கள் எமக்குச் சாதகமாக இருந்ததில்லை. அரசியல் சூழல் எமக்குச் சாதகமாக இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் எம் மக்களின் எதிர்பார்ப்பு எல்லை கடந்திருக்கின்றது. எம்மவர் எமக்குப் பெற்றுத் தருவார்கள் என்ற திட நம்பிக்கை அவர்களுக்குண்டு. அதை நாம் சிதைத்தலாகாது. எம் அமைச்சர்கள் குற்றங்கள் இழைத்தார்களா இல்லையா என்பது முக்கியமல்ல. சட்டப்படி அவை குற்றங்களா, இல்லையா என்பதும் முக்கியமில்லை. அவை தண்டனைக்கு உட்படுத்தப்படக் கூடிய குற்றங்களா அல்லது வெறும் தவறுகளா என்பது கூட முக்கியமல்ல.

அமைச்சர்களின் நடவடிக்கைகள் என்று கூறப்பட்டுள்ளவை மக்கள் மனதில் எந்தவிதமான எண்ணங்களை, மனத்திருப்தியின்மையை, வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன என்பன சிந்திக்கப்பாலன.

அந்தவகையில் குறையோ, நிறையோ, சரியோ, பிழையோ, ஒருசெயல்முறையின் ஊடாக நாங்கள் வந்துள்ளோம். ஒருவர் மேல்தான் குற்றம், முதலமைச்சர் மற்றையோரையும் தேவையில்லாது உள்ளடக்கியுள்ளார் என்ற குற்றச்சாட்டைச் சிலர் முன்வைத்தார்கள்.

### அரசியல் கலப்பு வருத்தத்தைத் தருகிறது

விசாரணை அறிக்கை அதற்கு விடை பகர்ந்திருக்கின்றது. இவ்வாறான விடயங்களில் அரசியல் கலக்கப்பட்டமை வருத்தத்திற்குரியது. இது சம்பந்தமாக ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். விசாரணைக் குழு முன் சமர்ப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு மேலதிகமாக முறைப்பாட்டாளர்கள் வராமையால் விடுவிக்கப்பட்டனர் எனக் கூறப்பட்ட அமைச்சர்களுக்கு எதிராகப் பல குற்றச் சாட்டுக்கள் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன. எனவே, உரிய விசாரணைகள் உண்மையைக் கொண்டு வருவன.

ஆனால், முறைப்பாட்டாளர் வராததால் விடுவிக்கப்பட்டவர்கள் குற்றம் செய்யாத நிரபராதிகள் என்று கூறித் திரிவது மன வருத்தத்திற்குரியது.

அவ்விரு அமைச்சர்கள் சம்பந்தமாக குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை என்பது முழுமையான உண்மை அல்ல. முறைப்பாட்டாளர்கள் வராததால் அவர்கள் மீதான குற்றங்களைப் பரிசீலித்து முடிவுக்கு வரமுடியாமல் இருந்தது என்பதே உண்மை.

முறைப்பாட்டாளருள் ஒருவர் பகிரங்கமாகவே இம்மன்றில், தான் விசாரணைத் தினமன்று போக முடியாமைக்கான காரணங்களைக் கூறினார். மீண்டும் விசாரணை நடந்தால் தன்னால் தனது குற்றச் சாட்டுக்களை நிலை நாட்ட முடியும் என்றும் கூறியுள்ளார்.

இரு அமைச்சர்களின் தன்நிலை விளக்கங்கள் எந்த அளவுக்கு மக்களின் நல்லெண்ணத்தை மீண்டும் நிலை நிறுத்துவன என்பது சர்ச்சைக்குரிய விடயம். ஆனால், கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டிய பல விடயங்கள் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் சம்பந்தமாக விசாரணைக் குழு வொன்றை மீள்நியமனம் செய்ய முடியாது.

அவர்கள் பேரிலான மேலதிக விசாரணைகள் காலத்தை விரயமாக்கும் செயல்கள். எமக்கிருக்கும் மிகுதிக்காலம் சொற்பமே.

### ஒற்றுமை அவசியம்

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் கூறியிருந்த விடயங்களை நடைமுறைப்படுத்த, நாம் எமது வேலைகளைத் துரிதமாகச் செய்ய எம்முள் ஒற்றுமை வேண்டும். சுயநலம் மேலிட்டால் பொது நலம் மறந்து போய்விடும்.

சில அமைச்சர்கள் எம்முடன் ஒத்துழைக்காது பிற நிகழ்ச்சிநிரல்களுக்குஏற்பச்செயற்படுவது நன்கு புலனாகின்றது. அவர்களுக்கு மத்திய அரசாங்கமும் அங்குள்ள அமைச்சர்களும் கூடிய முக்கியத்துவம் பெற்றுவிட்டார்கள்.

அதனால் எம்மைத் தூசிக்கவும் தயங்குகின்றார்கள் இல்லை. இது ஒற்றுமையை வளர்க்காது; ஒத்துழைப்பின்மையையே வலியுறுத்தும்.

அமைச்சர்கள் ஐவரும் ஒருமித்து வெளிப்படைத் தன்மையுடனும் பொறுப்புடனும் முன்சென்றால் தான் மக்கள் பயன் அடைவார்கள். நாம் ஒருவரோடு ஒருவர் ஒத்துழையாது செயற்படுவது எமது மக்களுக்கு நாம் செய்யும் துரோகமாகும்.

எனினும், குற்றஞ் சாட்டப்பட்ட அமைச்சர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்களோ இல்லையோ காணப்படுவார்களோ, இல்லையோ, இன்றைய நிலையில் அவர்கள் பதவியில் தொடர்ந்தால் எமது அமைச்சர்கள் மக்களின் ஏளனப் பார்வைக்கு ஆளாகவேண்டிவரும்.

அவர்களின் கீழ் பணிபுரியும் அலுவலர்களின் விமர்சனங்களுக்கு ஆளாக நேரிடும். அது தான் யதார்த்தம்.

நிர்வாக ரீதியான முறைகேடுகளும், ஒழுக்கவீனங்களும் நடைபெற்றுள்ளமையாலும், ஒரு நேர்மையான, கண்ணியமான, நாணயமான நிர்வாகத்தை மக்கள் எதிர்பார்த்திருப்பதாலும், இந்த அறிக்கையில் உள்ள சில விடயங்களையும் மற்றும் வேறு காரணங்களையும் கவனத்தில் எடுத்து மக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டிய கடப்பாடொன்று எனக்குள்ளது.

முன்னர் சாட்சியங்கள் வராமையால் விடுவிக்கப்பட்டவர்கள் மீது உரிய விசாரணை நடத்தாது அவர்களைத் தண்டிப்பது பொருத்தமாகாது.

### இந்த நிலைமையை நான் ஏற்படுத்தவில்லை

இன்றைய இந்த நிலைமையை நான் ஏற்படுத்தவில்லை. இந்த மன்றின் உறுப்பினர்களே ஏற்படுத்தினார்கள். சில உறுப்பினர்கள் என் சார்பானவர் என்று அடையாளப்படுத்தப்பட்ட ஓர் அமைச்சரை மட்டும் வெளியேற்ற முற்பட்டு அவர்களின் மதிப்புக்குரிய இன்னொருவரையும் பதவி இறக்கும் நிலைக்குக் கொண்டுவந்துள்ளார்கள்.

எமது வெளிப்படையான செயற்பாடுகள் சகலவற்றையும் மக்கள் முன்னிலையில் எடுத்துச் சென்றுவிட்டன. இது எமக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். குற்றங்கள் எனக் கூறப்பட்டவற்றை என்னிடம் தனிப்பட்ட முறையில் கூறியிருந்தால் அவை பற்றி உரிய விசாரணை செய்து நடவடிக்கைகள் எடுத்திருப்பேன். சந்தி சிரிக்க மன்றில் எடுத்துப் பத்திரிகைகளில் விளாசித் தள்ளி அமர்க்களம் ஆக்கி விட்டீர்கள்.

இப்பொழுது ஏன்தான் இவ்வாறு செய்தோம் என்று அல்லற்படுகின்றீர்கள். அமைச்சர்களின் மனங்களையும் புண்படுத்தியுள்ளீர்கள். இவ்வாறான புகார்கள் இனியாவது இரகசியமாக எமக்குத் தெரியப்படுத்தப்பட்டால் உரிய நடவடிக்கைகளை நாம் எடுப்போம்.

பண்டோராவின் பெட்டியைத் திறக்காதீர்கள் என்றார்கள். திறந்தார்கள். அத்துடன் வேண்டத் தகாத பலவும் வெளியே வந்துவிட்டன.

அதுபோல் இது வரை நடைபெற்ற செயற்பாடுகள் யாவும் எம் எல்லோருக்கும் பாடமாக அமையட்டும். தனிப்பட்ட குரோதங்களுக்கும், பதவியாசைக்கும், பேராசைக்கும் எம்மை அடிமைப்படுத்திக் கொண்டால் வரக் கூடிய விளைவுகளுக்கு எங்கள் எல்லோரதும் இதுவரையிலான நடவடிக்கைகள் சாட்சியமாக அமைகின்றன.

வேறெங்கோ இருப்பவரின் பதவி ஆசையானது எம்முள் சிலரை வழிநடத்திக் கொண்டிருக்கின்றதோ என்றும் எண்ண வேண்டியுள்ளது.

மக்கள் எமது வேலைகளைத் துரிதகதியில் நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அவற்றை நேர்மையுடனும், பொறுப்புடனும், வெளிப்படைத் தன்மையுடனும் செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்கள்.

இந்த நிலைமையில் இம்மன்றின் 16 உறுப்பினர்கள் அமைச்சரவை மாற்றம் கோரி சென்ற வருடம் மார்ச் மாதம் ஒருமனுச் செய்திருந்தார்கள். எந்தவித குறைகளும் கூறப்படாமல் எவ்வாறு அதனை நடைமுறைப்படுத்துவது என்று நான் அவர்கள் கோரிக்கைகள் சம்பந்தமாக நடவடிக்கைஎடுக்கத் தாமதித்தேன்.

ஆனால் முல்லைத்தீவுக்கு ஓர் அமைச்சர் இல்லை என்ற விடயத்தைக் கருத்தில் எடுத்திருந்தேன். அதன் பின்னர் தான் விசாரணைக்குழு அமைக்க வேண்டிவந்தது. அண்மையில் நான் அவர்களிடம் அந்தக் கோரிக்கையை நினைவுபடுத்தி அந்தக் கோரிக்கை இன்றும் வலுவானதா என்று அறிய முற்பட்டேன். அதிலிருந்து தெரியவந்தவை அக் கோரிக்கை இன்றும் வலுவுடையது என்பதே.

நான்கு உறுப்பினர்கள் மட்டும் எந்தவித மாற்றங்களும் இனித் தேவையில்லை என்று கூறியுள்ளார்கள். அதில் அரசியல் கலந்திருப்பதைக் காண்கின்றேன்.

எனவே, எல்லோரையும் மாற்ற வேண்டும் என்று சென்ற வருடம் கேட்டவர்கள் இன்று ஒருவரையும் மாற்றத் தேவையில்லை என்கின்றார்கள். மாற்றக்கோரும் கோரிக்கை என் முன் கிடப்பில் இப்போது உள்ளது.

### முதலமைச்சரும் போவாரா?

மற்றையவர்கள் போனால் முதலமைச்சரும் வெளியேற வேண்டும் என்றகோரிக்கை இப்பொழுது சிலர் மத்தியில் நடைமுறைச் செல்வாக்குப் பெற்றுவருகின்றது. ஒரு முதலமைச்சரை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றார்கள்.

அமைச்சர்களை, முதலமைச்சரே கட்சி வரையறைகளைப் பேணி, மாவட்ட நலவுரித்துக்களைச் சிந்தையில் நிறுத்தித் தேர்ந்தெடுக்கின்றார். அதற்கு சட்ட வலுவை ஆளுநர் அளிக்கின்றார். ஆளுநரால், தான் தோன்றித்தனமாக அமைச்சர்களை நியமிக்க முடியாது.

எனவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முதலமைச்சர் தான் சிபார்சு செய்த அமைச்சர்களைநீக்கிப்புதிய அமைச்சர்களை நியமிக்கக் கோரும் பொறுப்பை உடையவர் என்பதை இங்கு கூறிவைக்கின்றேன்.

அமைச்சர்கள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி நடைமுறை மாற்றம் ஒன்றை எமது உறுப்பினர்களும் மக்களும் விரும்புகின்றார்கள் போலத் தெரிகின்றது.

இவற்றை எல்லாம் கவனத்திற்கு எடுத்துச் செயற்படுவது எனது தார்மீகக் கடமையாகும். இதன் நிமித்தம் அமைச்சர்கள் குருகுலராஜா மற்றும் ஐங்கரநேசன் ஆகியோரைத் தாமாகவே தமது பதவிகளைத் தியாகம் பண்ணுமாறு வேண்டிக் கொள்கின்றேன். மற்றைய இரு அமைச்சர்களுக்கு எதிராகப் புதிய விசாரணையொன்று நடைபெறும்.

அவர்களுக்கு எதிராகக் கிடைத்திருக்கும் மேலதிக விடயங்களும் அவ்விசாரணையின்போது பரிசீலனை செய்யப்படுவன. விசாரணை முடிவடையும் வரை இயற்கை நீதியையும் நல்லாட்சி விழுமியங்களையும் கருதி இரு அமைச்சர்களும் விடுமுறையில் விலகி இருக்க வேண்டும்.

தமது அமைச்சு விடயங்களில் அவர்களோ அவர்களின் பிரத்தியேக ஆளணியினரோ பங்குபற்றல் ஆகாது. அவர்களின் அமைச்சுப் பொறுப்புக்களை நான் தற்காலிகமாக ஏற்றுக் கொள்கின்றேன். அவ் அமைச்சர்களின் செயலாளர்கள் எனக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

விசாரணையில் அவர்கள் விடுதலை அடைந்தால் திரும்பவும் பதவிகளில் தொடர்ந்து கடமையாற்றலாம். எனவே, முதலிரு அமைச்சர்களின் இராஜினாமாக் கடிதங்களையும் மற்றைய இருவரின் ஒருமாதத்திற்கான விடுமுறைக் கடிதங்களையும் நாளை மதியத்திற்கிடையில் நான் எதிர்பார்க்கின்றேன்.

கூடிய விரைவில் புதிய விசாரணைக் குழு நியமிக்கப்படும். வேண்டுமெனில் விடுமுறையில் உள்ள அமைச்சர்களின் விடுமுறைக் காலம் தேவைக்கேற்றபடி நீட்சி செய்யப்படும். - என்றார் முதலமைச்சர் விக்னேஸ்வரன். (உ)

## நமது பார்வை

ஆசிரியபீடம்: 30, கஸ்தூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## அரசியல் முதிர்வின்மை!

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வு எதிர்பார்க்கப் பட்டபடி பெரும் பரபரப்புடன் நடந்து முடிந்திருக்கின்றது.

வடக்கு மாகாண ஆட்சியை வைத்திருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையிலான பிளவு - முரண்பாடு - நேற்றைய அமர்வில் துலாம்பரமாகத் தெரிந்தது.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தாம் கட்சி சாராதவர் என்று கூறிக்கொண்டாலும்கூட அவர், தமிழ்க் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 'கோட்டாவில்' - அல்லது அக்கட்சி சார்பிலான வேட்பாளராக - களமிறக்கப்பட்டவரே.

ஆனால், நேற்றைய மாகாணசபை அமர்வும், அதற்கு முன்னர் வெளிவந்த செய்திகளும், நேற்றைய அமர்வுக்கு முன்னர் - முதல் நாள் மாலையில் - கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடனும், மிக நீண்ட நாள்களின் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுடனும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொலைபேசியில் பரிமாறியவை என்ற பெயரில் வெளியான தகவல்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் முதலமைச்சருக்கும் இடையிலான இடைவெளி மீளநிரப்பமுடியாத வகையில் நீண்டு விலகிவிட்டன என்ற கணிப்பீட்டைத்தான் நோக்கர்களுக்கு - பார்வையாளர்களுக்கு - மக்களுக்கு - தந்திருந்தன.

நேற்றைய மாகாணசபை அமர்வில் முதலமைச்சர் வெளியிட்ட அறிவிப்பு - அல்லது அவரது தீர்மானம் - இந்த இடைவெளியை மேலும் கதா தூரம் தள்ளிவைத்து, பிளவை நிரந்தரமாக்கி, உறுதிப்படுத்தியிருக்கின்றது.

மீண்டும் இந்தப் பத்தியில் ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். 'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமன்றி, நிலைநாட்டப்படுவது போலக் காட்டப்படவும் வேண்டும்'.

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு விவகாரத்துக்கும் இது பொருந்தும்.

ஓய்வுபெற்ற நீதியரசரான - இந்த நாட்டின் மிக உயர்ந்த நீதி ஆயத்தின் மதிப்பார்ந்த நீதிமானாக விளங்கிய - நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு நாம் யாரும் இதனைச் சுட்டிக்காட்டத் தேவையில்லை. அந்த வாசகத்தின் நுட்பங்களை - நுணுக்கங்களை - அர்த்த பரிமாணங்களை ஆழ மாகவும், விசாலமாகவும் - நுணுகி மிக நுட்பமாயும் அறிந்தவர் அவர்.

அமைச்சர்கள் விடயத்தில் நீதி நிலைநாட்டப்படுவதைக் காட்டும் விதத்தில் அவர் நடந்துகொண்டாரா என்பதே மிகப்பலரின் கேள்வியாகும்.

குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன என அவரால் நியமிக்கப்பட்ட குழுவினால் அடையாளப்படுத்தப்பட்ட இருவரைப் பதவி விலகுமாறு அவர் கோரியிருக்கின்றார். அது அவரது தனித்துவமான முடிவுக்குரிய விடயம். அதை யாரும் குறைசொல்ல வரவில்லை.

அதைக் கூட சம்பந்தப்பட்ட அறிக்கையைத் தாம் பெற்று மூன்று வாரங்கள் கடந்த நிலையில், அது பற்றிய விடயம் பெரிய விவகாரமாக உருவெடுக்க அனுமதித்துப் பார்த்திருந்துவிட்டு இப்போது செய்திருக்கின்றார்.

ஆனால், மேற்படி குழுவால் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்து விடுவிக்கப்பட்ட மற்றைய இரு அமைச்சர்கள் குறித்தும் திரும்பவும் விசாரணை நடத்தப் போகின்றேன். அதுவரை அடுத்த ஒரு மாதத்துக்கு கட்டாய விடுமுறையில் அவர்கள் செல்லவேண்டும் என்று அவர் கேட்டிருக்கின்றார்.

'குற்றம் இழைத்தவர் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப் படும்வரை ஒவ்வொருவரும் அப்பாவியாகவே கருதப்பட வேண்டும்' - என்ற நீதித்துறைக் கோட்பாட்டை அவருக்கு நாம் புரியவைத்து விளக்கத் தேவையில்லை.

ஆனால், தமது அரசியல் நோக்கத்துக்காக அந்தக் கோட்பாட்டைத் தமக்கு ஏற்ற வகையில் தமது நேற்றைய உரையில் திரித்து அர்த்தப்படுத்த அவர் எடுத்த முயற்சி, இதுவரை அவர் தொடர்பில் நடு நிலையாளர் என இருந்த விஸ்வரூபப் படிமானத்தைச் சிதறடித்து அவரும் ஒரு மூன்றாந்தர அரசியல்வாதிதான் என்ற பிம்பத்தையே விட்டுச் செல்வதாக உள்ளது.

சுமார் நான்கு வருடம் இந்த முதல்வர் பதவியில் அவர் இருந்து விட்டார். எஞ்சியிருப்பது இன்னும் ஒரு வருடம்தான். அவருக்கு நிகராக அல்லது அதற்கும் அதிகமாக இந்த முதல்வர் பதவிக்கு உரிமை கோரக்கூடிய - அருகதை உடைய - பலர் கூட்டமைப்பில் இருந்தும் இந்த நான்கு வருடங்களாக அவரது முதல்வர் பதவிக்குப் போட்டியாக யாரும் இங்கு வரவில்லை. அப்படி இருக்கையில் நேற்றைய தமது உரையில், '*வேறெங்கோ இருப்பவரின் பதவி ஆசை எம்முன் சிலரை வழிநடத்திக்கொண்டிருக்கிறதோ*' என்ற வாசகம் மூலம் அவர் சில தலைவர்களைச் சாடமுற்படுகின்றமை, இத்தகைய முதிர்ந்த மனிதன் என நாம் இதுவரை கருதிய மனிதருக்குள், இத்துணை சின்னத்தனமா என்ற எண்ணத்தை வடக்கு மக்களிடம் ஊன்றிப் பதித்துவிட்டதே.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக அவரைக் கூட்டமைப்பு அறிவித்தது என்பது உண்மைதான். ஆனால், எமது தேர்தல் முறைமையில் முதலமைச்சர் வேட்பாளரை அறிவித்துதான் மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்பதல்ல. அத்தகைய கட்சி அறிவிப்பு சட்ட வலுவுள்ளதும் அல்ல. கிழக்கு மாகாணத்தின் இன்றைய முதல்வர் முன்னரே முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவரல்லர்.

ஆக, முதலமைச்சரை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றார்கள் என்ற அவரது கூற்று வலிதற்றது; தவறானது. ஒட்டுமொத்தத்தில் இந்த விடயத்தில் அவரது பேச்சும் நடவடிக்கைகளும் அவரும் ஒரு முதிர்ச்சிஅற்ற அரசியல்வாதிதான் என்பதை நிரூபித்துவிட்டன.

# சகல மாவட்டங்களிலும் நல்லிணக்கக் குழுக்கள்!

## அமைக்க அரசு தீர்மானம் என்கிறார் கயந்த கருணாதிலக



கொழும்பு, ஜூன் 15

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு மாவட்ட மட்டத்தில் நல்லிணக்கக் குழுக்களை அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும், அமைச்சரவை துணை பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் தற்போதைய நிலமையைக் கருத்திற்கொண்டு மாவட்ட செயலாளரின் தலைமையில் மதத்தலைவர்கள், பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் தெரிவு செய்யப்பட்ட வேறு பிரதிநிதிகளுடன் கூடிய மாவட்ட மட்டத்திலான நல்லிணக்கக் குழுக்களை அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இன மோதல்களைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அந்தக் குழுவுக்கு அதிகாரத்தை வழங்குவதற்கும், மாவட்டக் குழுக்களுக்கு மேலதிகமாக தேசிய நல்லிணக்கக் குழு ஒன்றை நியமிப்பதற்கும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கக் குழு ஒன்றை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காகத் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.- என்றார். (எ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டங்களில் தமிழ்த் தலைமைகள் பங்கேற்பதற்கு முன்வருக!

## அழைப்பு விடுக்கிறார் வவுனியா மாவட்ட பிரதிநிதி

வவுனியா, ஜூன் 15

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களில் தமிழ்த் தலைமைகள் பங்குகொள்ள முன்வரவேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் வவுனியா மாவட்ட பிரதிநிதி பேரின்பராசா பாலேஸ்வரி அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பிரதி நிதிகளுடனான ஜனாதிபதியின் சந்திப்பொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு தொடர்பாகக் கருத்துவெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தலைவர்கள் போர்க் காலத்தில் தங்கள் பாதுகாப்புக் கருதி அமைதியாக இருந்தார்கள் என நாங்கள் கருதினாலும் கூட போர் முடிவடைந்ததன் பின்னர் நல்லாட்சி அரசில் தமிழ்த் தலைவர்கள் மிகவும் தெளிவானவர்களாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால், தமிழ்த் தலைவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டங்களில் அக்கறை காட்டாமல், அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளாமல் இருந்தமையால் தான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமிழ்த் தலைமைகள் மீது வெறுப்புக் காட்டும் நிலைமை வந்தது.

ஜனாதிபதியை நாங்கள் யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசியுள்ளோம். இருந்தபோதும் எங்கள் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் பட்சத்தில் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள எமது போராட்டங்களில் தமிழ்த் தலைமைகள் முன்வந்து பங்குகொண்டு எமது கோரிக்கைகள் தொடர்பான தீர்வுக்காகப் போராட வேண்டும். அத்துடன், ஆதரவு தந்து அக்கறைகாட்ட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தலைவர்கள் முன்பாக வைக்கிறேன்.- என்றார். (எ-100)

# சமூகங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதே அரசின் தேவை!

## இவ்வாறு கூறுகிறார் அமைச்சர் தயாசிறி

கொழும்பு, ஜூன் 15

பிரச்சினைகளுக்கு பேச்சின் மூலமே தீர்வு காண வேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சரும் அமைச்சரவை துணைப் பேச்சாளருமான தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

சமூகங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாகும். இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு ஏற்கனவே மேற்கொண்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை தொடர்பில் செய்தியாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரச்சினைகளை சட்டவாதத்தின் மூலம் தீர்க்க முடியாது. பிரச்சினைகள் பற்றித் தொடர்ந்தும் பேசிக் கொண்டிருக்காது அவற்றைப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

மதங்கள் மற்றும் இனங்களுக்கு இடையிலே முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களைத் தெரிவிப்போர் மற்றும் வன்முறையைத் தூண்டுவோர் தொடர்பில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சட்டமா அதிபர் மூலம் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.- என்றார். (எ)


ஆபத்தை உணர்வோம்! அவதானமாக இருப்போம்!!

முகத்தில் ஏற்படும் கடிகாயம் மிகவும் ஆபத்தானது. எனவே, செல்லப் பிராணிகளை முத்தமிடக்கூடாது. தெரு நாய்கள், காட்டுவிலங்குகளுக்கு உணவளிக்க முற்படக்கூடாது.



செல்லப்பிராணி தெரு மிருகத்தால் கடிக்குள்ளானால் மிருக வைத்தியரை நாடலாம்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.


### நாளை

16.06.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: சதயம் பி.ப 2.53 வரை
திதி: சப்தமி பி.இ; 12.59 வரை

சுபநேரம் : 5.53 – 7.23 வரை
இராகுகாலம் : 10.23 – 11.53 வரை

# முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் இன்றுவரை நிறுத்தப்படவில்லை!

## ஆஸி.தூதுவருடனான சந்திப்பில் ரிஷாத் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 15

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளும் தாக்குதல்களும் இதுவரை நிறுத்தப்படவில்லை. ஆயுதக் கலாசாரத்தையோ வன்முறையையோ முஸ்லிம்கள் விரும்பவில்லை என்று இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஆஸ்திரேலிய தூதுவர் பிரைஸ் ஹட்சஸனிடம் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சுட்டிக்காட்டினார்.

பிரைஸ் ஹட்சஸனை, தனது அமைச்சில் நேற்று முன்தினம் சந்தித்த அமைச்சர் முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக் காலமாக தீவிரமடைந்திருக்கும் இனவாதச் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த அரசின் காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற கொடூரங்களுக்கும் தற்போதைய அரசில் இடம்பெற்றுவரும் சம்பவங்களுக்கும் இடையே எந்த வித்தியாசங்களையும் நாம் காணவில்லை.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டி முஸ்லிம்களை நிம்மதியாக வாழச் செய்யுமாறு பலமுறை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம். எனினும் இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய இனவாதிகளையும், சூத்திரதாரிகளையும் சட்டத்தின் முன் கொண்டு வருவதில் தயக்கம் காட்டப்படுகின்றது.

இத்தனை அநியாயங்கள் அரங்கேறுகின்ற போதிலும் முஸ்லிம்கள் பொறுமையாகவே இருக்கின்றனர். பெரும்பாலான சிங்களவர்கள் முஸ்லிம்களுடன் நல்லுறவுடனும், அன்புடனும் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் ஒரு சிறிய இனவாதக் கூட்டம் இந்தச் சம்பவங்களை அரங்கேற்றி வருகின்றது. பொதுபலசேனா இயக்கத்தின் செயலாளர் ஞானசாரதேரர் இஸ்லாத்தையும் குர்ஆனையும், முஸ்லிம்களையும் கேவலப்படுத்தி வருவதில் முன்நின்று செயற்படுகின்றார்.

அவருக்கு எதிராக பல முறைப்பாடுகள் உள்ள போதும் அவர் மீது இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.- என்றார்.

இதேவேளை இந்த விடயங்கள் தொடர்பில் தானும் அறிந்துள்ளார் எனவும் இது தொடர்பில் கவனத்தில் கொள்வார் எனவும் ஸ்ரீலங்கா மற்றும் மாலைதீவுக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் தெரிவித்துள்ளார். (எ)

## இலங்கை-இந்தியா இடையே மேலும் 3 விமான சேவைகள்

இலங்கை-இந்தியா இடையே ஜூலை மாதம் தொடக்கம் மேலும் மூன்று விமான சேவைகளை ஆரம்பிக்க ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி விசாகப் பட்டனம், ஹைதராபாத் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களுக்கு முறையே ஜூலை 8, 12 மற்றும் 16 ஆம் திகதிகளில் இந்தப் புதிய விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் மூலம் இந்தியாவின் சென்னை, திருவானந்தபுரம், திருச்சி, மும்பை, புது டில்லி, புத்த கயா, மதுரை, வாரணாசி, கொச்சி, பெங்களூர் மற்றும் கொல்கத்தா ஆகிய நகரங்களுக்கான விமானப் பயணங்கள் மேற் கொள்ளப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இரசாயனக் காகிதப் புத்தகத்தால் மாணவரின் ஆரோக்கியத்துக்கு கேடு!

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கப் பிரதிச் செயலாளர் குற்றஞ்சாட்டு

பாடசாலைகளில் தரம் ஏழு மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் புவியியல் புத்தகம் மாணவர்களின் ஆரோக்கியத்துக்கு கேடு விளைவிக்கக்கூடிய விஷ இரசாயனக் காகிதத்தில் - சிந்தெட்டிக் தாளில் -அச்சிடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிச் செயலாளர் ஹரித்த அளுத்கே குற்றஞ் சுமத்தியுள்ளார்.

தொழில்சார் நிபுணர்களின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அந்த விஷ இரசாயனத்தாலான காகிதத்தால் அச்சிடப்பட்ட 5 லட்சம் புத்தகங்களுக்கு அரசால் 15 கோடி ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பரிசோதித்து தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆய்வு முடிவொன்றை வெளியிட்டிருந்தது. அந்த ஆய்வில் அந்த இரசாயனத்தாலான புத்தகத்தால் சூழல் பாதிப்பு, மாணவர்களின் ஆரோக்கியத்தில் சீர்கேடு மற்றும் தொழில் நுட்பப் பிரச்சினைகள் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் தற்போது மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கும் 2 லட்சத்துக்கும் அதிகமான அந்த புவியியல் புத்தகங்களை மீளப்பெறுவதற்கு ஜனாதிபதி துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.-என்றார். (எ)

### இரணைமடு குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட

# மேலதிக நெற்செய்கை கிளிநொச்சியில் அழிப்பு!



கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் அனுமதிக்கு மாறாக மேலதிகமாக செய்கை பண்ணப்பட்ட சுமார் 32 ஏக்கர் நெற்செய்கை நேற்று முன்தினம் அழிக்கப்பட்டது. நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் இந்த அழிப்பு நடவடிக்கை விவசாய அமைப்புக்களின் ஆதர வுடன் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் தீர்மானத்துக்கு அமைய இந்த மேலதிக விதைப்பைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டின் முதல் கட்டமாகக் கடந்த முதலாம் திகதி சுமார் 47 ஏக்கர் நெற்செய்கை அழிக்கப்பட்டது.

இந்தநிலையில் அந்தப் பயிர்கள் வளர்ந்து 45 நாள்களுக்கு மேல் ஆகியுள்ள நிலையில், குளத்தில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்பதால் மேலதிக செய்கைகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் தற்போது 7 அடியாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(எ)

# ஜனாதிபதியைச் சந்தித்தார் பாக்.கடற்படைத் தளபதி!



கொழும்பு, ஜூன் 15

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் முஹம்மத் ஸகாவுல்லாஹ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொழும்பில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தார்.

போர்க் காலத்திலும் சமாதான காலப்பகுதியிலும் இலங்கையுடனான பாகிஸ்தானின் நெருங்கிய தொடர்புகள், அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த் தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிப் பொருள்களை அனுப்பி வைத்தமை ஆகியவை தொடர்பில் ஜனாதிபதி பாகிஸ்தானுக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நீண்ட காலமாக இருந்து வரும் நெருங்கிய அரசியல் மற்றும் கலாசார உறவு களையும் ஜனாதிபதி இதன்போது நினைவு கூர்ந்தார்.

இதன்போது 'இலங்கை அரசுக்கும் கடற்படைக்கும் பாகிஸ்தான் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்' என்று அட்மிரல் ஸகாவுல்லாஹ் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பை நினைவு கூரும் முகமாக ஜனாதிபதியும் பாகிஸ்தான் கடற்படைத் தளபதியும் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர். (எ)

# வற்றாப்பளை ஆலயத் திருவிழாவால் இ.போ.சவுக்கு ரூ. 17 லட்சம் வருமானம்

### வவுனியா சாலை முகாமையாளர் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 15

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு இடம்பெற்ற விசேட பஸ் சேவையில் வவுனியா இ.போ.சபைச் சாலைக்கு 17 லட்சத்து 59 ஆயிரம் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக சாலை முகாமையாளர் முகமட் சாகிர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 12 ஆம், 13 ஆம் திகதிகளில் வவுனியாவிலிருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு 41 இ.போ.சவின் 41 பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. இதனால் வவுனியாச் சாலைக்கு 12 ஆம் திகதி 9 லட்சத்து 93 ஆயிரம் ரூபா வருமானமும் 13 ஆம் திகதி 7 லட்சத்து 66 ஆயிரம் ரூபா வருமானமும் கிடைக்கப் பெற்றுள்ளது.-என்றார். (எ-100)

# நாவலடி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை மிக விரைவாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை!

நாவலடி, ஜூன் 15

மட்டக்களப்பு நாவலடி பிரதேச மக்களுக்கு ஏற்பட்டுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை கிழக்கு மாகாணசபை முன்னெடுத்துள்ளது.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

நாவலடிப் பிரதேசத்துக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் சகிதம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நேரில் சென்று நிலைமையை ஆராய்ந்த முதலமைச்சர், அதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.





கிழக்கு முதல்வர் தெரிவிப்பு

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


இங்கு வந்துள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் அதிகாரிகள் இந்தப் பகுதிகளில் உள்ள கிணறுகள், நிலத்தடிக் குழாய்க் கிணறுகள் மற்றும் நீர் நிலைகள் ஆகியன வற்றைப் பார்வையிட்டுள்ளனர்.

இதன் மூலம் குடி தண்ணீரை நிரந்தரமாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஏனைய வழிவகைகளையும், நீர் மாதிரிகளையும் ஆராய்ந்துள்ளனர்.

இந்த ஆய்வின் அடிப்படையில், வருடாந்த வறட்சிக் காலத்தில் ரிதீதென்ன, ஜெயந்தியாய மற்றும் நாவலடி பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான செயற்றிட்டங்கள் உடனடியாகத் தொடங்கப்பட உள்ளன. -என்றார். (ச)

# இருதய நோய் விழிப்புணர்வுச் செயலமர்வு மட்டக்களப்புக் கூட்டுறவுக் கல்லூரியில்!







மட்டக்களப்பு, ஜூன் 15

இருதய நோய் முற்காப்பு விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்றுப் புதன்கிழமை மட்டக்களப்பு கூட்டுறவுக் கல்லூரியில் நடைபெற்றது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க நடைபெற்ற இந்தச் செயலமர்வை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இருதயநோய் சிகிச்சைப்பிரிவு வைத்தியர் ஆர்.மேகதீபன் நடத்தினார்.

மேற்படி செயலமர்வு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இருதய நோய் சிகிச்சைப்பிரிவு வைத்திய நிபுணர் கே.அருள்நிதி தலைமையில் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இருதய நோய்களுக்கான முற்காப்பு நடவடிக்கைச் செயற்பாட்டின் கீழ் திணைக்களங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் விழிப்புணர்வுச் செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அத்துடன், ஒழுங்குபடுத்தலின் அடிப்படையில் இருதயம் சார் நோய்களுக்கான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விழிப்புணர்வுச் செயலமர்வில் நீரிழிவு நோய் மற்றும் அதன் தாக்கம், அதன் ஊடாக உருவாகும் இருதயம் சார் நோய்கள், உணவு முறை மாற்றத்தின் தேவை, நோய்த்தடுப்பு, உடற்பயிற்சியின் முக்கியத்துவம் உட்பட பல விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன. (ச)

### ஏறாவூரில் யானை தாக்கி விவசாயி காயம்!

ஏறாவூர் - வந்தாறுமூலை பிரதேசத்தில் நேற்றுப் புதன்கிழமை காட்டு யானை தாக்குதலுக்கு உள்ளாகி, விவசாயி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சித்தாண்டி கிராமத்தைச் சேர்ந்த கே. குமாரசாமி (வயது - 40) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

இவர் அதிகாலை 4 மணியளவில் உப்போடைப் பிரதேசத்திலுள்ள வயலில் இருந்து வந்தாறுமூலை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்போது இடை வழியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

காயமடைந்த இவர் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சித்தாண்டி ஈரளக் குளம் குடாவெட்டைப் பகுதியில் வைத்து விவசாயி ஒருவரை காட்டு யானை தாக்கியது. இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த அவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

### அட்டாளைச்சேனையில் பாவனைக்கு உதவாத பொருள்கள் மீட்பு!

அட்டாளைச்சேனையிலுள்ள 6 வர்த்தக நிலையங்களில் நேற்றுப் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது, பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது உப்பு, கடலை வகைகள் மற்றும் கோதுமை மா உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)

# பொருத்தமற்ற காலப்பகுதியில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றம்!

கிழக்கு மாகாணத்தில் பொருத்தமில்லாத காலப் பகுதியில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பில் கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர் சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கிழக்கு மாகாணத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.ஜெயராஜா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஆசிரியர் இடமாற்றத்துக்கான தேசிய கொள்கை ஒன்றுள்ளது. அந்தக் கொள்கையைப் பிற்பற்றியோ அல்லது மாகாணத்துக்குப் பொருத்தமான ஒரு கொள்கை வகுப்பின் அடிப்படையிலோ ஆசிரியர் வருடாந்த இடமாற்றம் இடம்பெற வேண்டும்.

ஆனால், இந்த இரண்டு கொள்கைகளும் இல்லாது கிழக்கு மாகாணத்தில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் வருடா வருடம் இடம்பெற்று வருகின்றமை ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள், கல்வி அலுவலர்கள் அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

வருடத்தின் நடுப்பகுதியில் வருடாந்த இடமாற்றம் எங்கும் இடம்பெறுவதில்லை. தேசிய இடமாற்றக் கொள்கையின்படி இடமாற்றத்தை விரும்பும் ஆசிரியர்கள், தமக்கான இடமாற்றத்தை வேண்டி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக நடப்பு வருடத்தின் மே, ஜூன் மாதங்களில் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர், அந்த விண்ணப்பங்கள் கல்வி அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் இடமாற்றப்பட்டியல் ஓகஸ்ட் மாதத்தில் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

### கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர் சங்கம் ஆட்சேபம்

அதில் ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின், அவற்றை உள்வாங்கி இறுதி இடமாற்றப்பட்டியல் நவம்பர் மாதத்தில் அனுப்பப்பட்டு, ஆசிரியர்களுக்கு அந்த ஆண்டிறுதி விடுமுறைக்கு முன் வழங்கப்பட வேண்டும். இது மாற்றலாகிச் செல்லும் பாடசாலைகளில் புதிய பாட ஒழுங்குகளை ஆசிரியர்கள், அதிபர்கள் மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

ஆனால், இந்த வித நிர்வாக ஒழுங்குகள் எதுவுமே இல்லாமல் முறையற்ற விதத்தில் ஆண்டின் நடுப்பகுதியில் வழங்கப்படும் ஆசிரியர் இடமாற்றங்களால் மாணவர்களின் கல்வி உட்பட நிர்வாகச் செயற்பாடுகள் பாதிக்கப்படும்.

ஆண்டின் நடுப்பகுதியைக் கடந்த நிலையிலேயே ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சை போன்ற முக்கிய பரீட்சைகள் நடைபெறுகின்றன.

முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்படும் ஆசிரியர் இடமாற்றங்களால், ஆசிரியர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து நீதிமன்றம் செல்ல வேண்டியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் ஆசிரியர் குழாம் ஒன்று இவ்வாறு தமக்கு நீதி வேண்டி நீதிமன்றத்தை நாடியுள்ளது. அவர்களது இடமாற்றங்களை நிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆகவே, இத்தகைய குழப்பகரமான நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக கிழக்கு மாகாணத்தில் முறையான ஆசிரியர் இடமாற்றக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும் என்பதை கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கம் வலியுறுத்தி நிற்கின்றது'. -எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மத்திய கிழக்கின் முறுகல் நிலைமை இலங்கையைப் பாதிக்கும் அபாயம்!

## எச்சரிக்கிறார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, ஜூன் 15

மத்திய கிழக்கின் சில நாடுகளுக்கும் கட்டாருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல், எதிர்காலத்தில் மேலும் மோசமடைந்து இந்து சமுத்திரத்துக்கும் இலங்கைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் காணப்படுவதாக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சன்னி முஸ்லிம்வாத திட்டத்தின் ஊடாக கட்டார் இராஜ்ஜியத்தைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கையின் ஆரம்பக் கட்டமா இந்த முறுகல் நிலை என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மத்திய கிழக்கு முரண்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கட்டார் உதவியளிப்பதாகக் குற்றஞ்சாட்டும் தீவிரவாத அமைப்புகள் அனைத்தும் சன்னி மத பிரிவுக்குரியவை. கட்டார் அரசு தமது தலை நகரான டோஹாவை அரேபியாவின் பிரதான வணிக மத்திய நிலையமாக மாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கட்டார் விமான சேவை, அல்ஜஸீரா தொலைக்காட்சி மற்றும் டோஹா நகரை வணிக மத்திய நிலையமாக மாற்றுவது ஆகியவற்றைத் தோல்வியடையச் செய்யும் நோக்கங்களுக்காக, ஐக்கிய அரபு இராஜ்ஜியமும் துபாயும் இணைந்து பணியாற்றுகின்றன.

ஒஸாமா பின் லேடன் உள்ளிட்ட, இஸ்லாமிய ஆயுததாரிகள், அல்குவைதா மற்றும் அல் நுஸ்ரா போன்ற தீவிரவாத அமைப்புகளின் தலைவர்கள் அனைவரும் சவூதியைச் சேர்ந்தவர்கள். அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல்களில் ஈடுபட்ட 19 பேரில் 15 பேர் சவூதி அரேபியர்கள் என்று கூறப்படுகின்றது.

மேலும் உலகளாவிய ரீதியில் வஹாப் வாதத்தை பரப்புவதற்காக சவூதி அரேபியா நிதி வழங்கியது என்று கூறியதுடன் வியாபாரம், சமூக நல நிறுவனங்கள், வங்கிகள் என பெரியளவிலான பெயர் பட்டியலை கட்டார் வெளியிட்டுள்ளது.



எமது நாட்டவர்கள் கட்டார், சவூதி அரேபியா, அரேபியாவின் ஏனைய நாடுகளிலும் லட்சக் கணக்கில் பணியாற்றுகின்றார்கள். அவர்களின் தொழிலுக்கு மாத்திரமல்ல அதற்கும் அப்பால் இலங்கையின் அரசியல் மோதலுக்கும் ஆரம்பமாக இந்த விடயம் அமையக்கூடும்.

இந்நிலைமையில் சவூதி, கட்டார் மோதல் வெறும் தீவிரவாதத்துக்கு நிதி உதவி வழங்குவதற்கு அப்பால் சென்று இயற்கை அரசியல் மற்றும் இயற்கை எரிபொருள் தொடர்பான மோதல் என்பது தெளிவாகிறது.

அந்த மோதலின் அதிர்வலைகள் இந்து சமுத்திரத்துக்கு மாலைதீவினூடாக எதிர்காலத்தில் வர வாய்ப்புள்ளது என்பதை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும்.- என்றார்.

## அரியம் எம்.பி. விசாரணையில்!

கொழும்பு, ஜூன் 15

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கொழும்பில் அமைந்துள்ள குற்றப் புலனாய்வு பிரிவின் தலைமையகத்திற்கு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவரிடம் சுமார் ஒரு மணித்தியாலம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என அறிய முடிகின்றது.

இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலகட்டத்தில் வெளிநாடு செல்வதற்காக கடிதம் வழங்கியமை தொடர்பாகவே இந்த விசாரணை இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## பொதுபலசேனாவை இயக்கும் சூத்திரதாரி கோட்டாபயதான்!

### அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க சாடல்

பொது பலசேனா அமைப்புக்கு அன்று பாலூட்டி வளர்த்த கோட்டாபய ராஜபக்ஷவே இன்றும் அந்த அமைப்புக்குப் பாதுகாப்பு வழங்கி வருகின்றார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார்.



"பொது பலசேனா அமைப்புக்கு அன்று பாதுகாப்பு வழங்கி அந்த அமைப்பை வளர்த்தெடுத்தவர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷதான். இன்று அந்த அமைப்பு இனவாதம் மற்றும் மத வாதத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டு வருவதன் பின்னணியிலும் அவர்தான் இருக்கின்றார். இனவாதம், மதவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படும் குழுக்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.-" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## காணாமற்போனோர் அலுவலகத்தை உருவாக்கும் சட்டமூலம் மீது விவாதம்

### நாடாளுமன்றில் 21 ஆம் திகதி நடக்கும்

காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிர்வகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) திருத்தச் சட்டமூலம் தொடர்பாக, எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முழுநாள் விவாதம் நடத்துவதற்கு, கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தை தாபிக்கும் விடயம், கால தாமதமாகுவது தொடர்பில், பல்வேறான தரப்புகளிலிருந்து, அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், அந்த அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கு அரசு இணக்கம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

திருத்தச் சட்டமூலம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால், அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அடுத்தவார நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 20ஆம் திகதியன்று ஆரம்பமாகி, 23ஆம் திகதி நிறைவடைய உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ)

## ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர்கள் பலர் இவ்வாண்டில் இலங்கைக்கு வருகை தருவர்

### ஜெனீவாவுக்கான கொழும்பின் பிரதிநிதி தெரிவிப்பு

இந்த ஆண்டில் இலங்கைக்கு ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர்கள் பலர் பயணங்களை மேற்கொள்ளவுள்ளனர் என்று ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்தார்.



ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 35 ஆவது கூட்டத்தொடரில், நேற்றுமுன்தினம் இதற்கு முன்பு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் மோனிகா பின்டோவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்து உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க-

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயல்முறைகளின் ஒரு கட்டமாக, ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்களுக்கு இந்த ஆண்டில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தீவிரவாத முறியடிப்பில், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை ஊக்குவிக்கும் மற்றும் பாதுகாக்கும் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் வரும் ஜூலை மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

மேலும், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தைப் பாதுகாக்கும் மற்றும் ஊக்குவிக்கும் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர், உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீளநிகழாமையை உறுதிப்படுத்தல் சிறப்பு அறிக்கையாளர், எதேச்சாதிகாரமாகத் தடுத்து வைத்தல் தொடர்பான பணிக்குழு ஆகியவற்றைச் சேர்ந்த நிபுணர்கள் இந்த ஆண்டில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வர்.- என்றும் தெரிவித்தார். (உ)

கொழும்பில் தமிழர்கள் இருவர் கடத்தல்:

## கைதான கடற்படை அதிகாரிக்கு விளக்க மறியல் காலம் நீடிப்பு!

கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியில், வெள்ளை வானில் தமிழர்கள் இருவர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படை லெப்டினன்ட் கொமாண்டர் தம்மிக அனில் மாபாவின் விளக்கமறியலை எதிர்வரும் 27ஆம் திகதி வரை நீடித்து கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

கொழும்பு பிரதான நீதிமன்ற மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ரொஸ்கி முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, சந்தேகநபரின் விளக்க மறியல் நீடிக்கப்பட்டது.

பக்கரிசாமி லோகநாதன், இரத்தின சாமி பரமானந்தன் ஆகியோர் 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் வானொன்றில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர். அந்தக் கடத்தற் சம்பவத்துடன் தொடர்புடைய வான், வெலிசறை கடற்படை முகாமுக்குப் பின் பகுதியில் இருந்தாக விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

இதனையடுத்து, வெலிசறை முகாமின் அதிகாரியாக இருந்தவரும் தற்போது, கடற்படை லெப்டினன்ட் கொமாண்டராக உள்ளவருமான தம்மிக அனில் மாபா, குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே. (உ)

# நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் ஹெரோயினுடன் 8 பேர் கைது!



நாட்டின் சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை ஹெரோயினுடன் எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு - கலகந்தை சந்திப் பகுதியில் 2 கிராம் 280 மில்லி கிராம் ஹெரோயினுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஹோமாகம - தெல்கஹவத்தை பகுதியில் 3 கிராம் 350 மில்லி கிராம் ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

மேலும், மாத்தறை - கந்தர பகுதியில் ஒரு கிராம் 850 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவரும், மதவாச்சியின் ஹெல பஸ்வெவ மற்றும் கனதராவ ஆகிய பகுதிகளிலும் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## தினசரி ராசி பலன் 15.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 01 ஆம் நாள் ஷஷ்டித் திதி பி.இ. 5.08 மணி வரை. பின்னர் ஸப்தமி. நட்சத்திரம்: அவிட்டம் மாலை 5.15 மணி வரை. பின்னர் சதயம். சித்தயோகம் மாலை 5.15 மணி வரை. பின்னர் சுபயோகம், ராகுகாலம்: பகல் 1.45 மணி முதல் 3.20 மணி வரை. சுபநேரம்: காலை 7.25 மணி முதல் 8.45 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: திதி இல்லை. பிறந்த நட்சத்திர வழிபாடு: அவிட்டம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** அனுகூலமான நாள் ஆகும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். திட்டமிட்ட வெளிநாட்டுப்பயணம் அனுகூலமாகும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**ரிஷபம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் முயற்சிகளில் தடை உண்டாகும். தேவையற்ற செலவுகளால் கடன் நேரும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கின்றமையால் லாபம் குறையும்.

**மிதுனம்:** யோகமான நாள் ஆகும். வீடு, வாகனம், வாங்கும் யோகம் உண்டாகும். பெண்களுக்குத் திருமண யோகம் உண்டாகும்.

**கடகம்:** கவலையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் அமைதி குன்றும். தொழிலில் கடின உழைப்பும், அலைச்சல்களும் அதிகரிக்கும்.

**சிம்மம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். பயணத்தின் போது அவதானம் தேவை.

**கன்னி:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு திருப்தியைத் தரும். வியாபாரத்தில் ஆக்கபூர்வ முன்னேற்றம் காணப்படும்.

**துலாம்:** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும். சகோதர உறவு வலுவடையும்.

**விருச்சிகம்:** சலனம் மிகுந்த நாள். மனக்குழப்பம், கவலை அதிகரிக்கும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். சுய தொழில் நஷ்டமடையும்.

**தனுசு:** சமபலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் அமைதி பேணப்படும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை. பய்ணங்களைத் தவிர்க்கவும்.

**மகரம்:** உயர்வான நாள். வியாபாரம் துரித வளர்சியடையும். உத்தியோக மேன்மை உண்டாகும். தொழில் செய்யும் பெண்களுக்கு வரவேற்பு அதிகரிக்கும்.

**கும்பம்:** மகிழ்ச்சியான நாள். தனவ்ரவு பெருகும். குடும்பத்தில் மட்டற்ற மகிழ்ச்சி காணப்படும். பொருள்கள் திரும்பக் கிடைக்கும்.

**மீனம்:** துன்பமான நாள். வருமானம் நலிவடையும். குடும்பத்தில் அமைதி குறைந்து காணப்படும். வேலை செய்யும் இடங்களில் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளர்க நேரும்.

சந்திராட்டமநாள்: உத்தரம் 2,3,4 அத்தம். சித்திரை 1,2 ஆம் பாதங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

# தண்டப்பணம் செலுத்தாமல் சிறையில் தவித்துக்கொண்டிருப்பது அபத்தமானது!

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 15

சிறிய குற்றங்களுக்காக விதிக்கப்பட்ட தண்டப் பணத்தைச் செலுத்தமுடியாமல் சிறைகளிலுள்ளோர் தொடர்பில் எதிர்காலத்தில் கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்காக உரிய தரப்பினருடன் தான் கலந்துரையாடவிருக்கிறார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டில் 43.7 சதவீதமான கைதிகள் தண்டப் பணம் செலுத்த முடியாமையாலேயே சிறைகளிலிருந்தமையைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அது அபத்தமானது எனவும், தற்போதுள்ள சட்ட திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூக அமைப்புகள் ஊடாக இந்தப் பிரச்சினைக்கான துரித தீர்வை எட்ட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கைச் சிறைக்கைதிகள் நலன்புரி சங்கத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நேற்று பிற்பகல் கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, கைதிகள் இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்காக அனைவரும் பாடுபட வேண்டும். சிறைகளில் உள்ளவர்களை மனிதாபிமானத்துடன் நோக்கி அவர்கள் அந்த நிலைக்கு வருவதற்குக் காரணமான சமூக நிலையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்.-என்றார். (ம)



களுபோவில போதனா மருத்துவமனைக்கு அன்பளிப்பாகச் சுமார் 25 கோடி ரூபா பெறுமதியான காணிகளின் உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதில், இந்திராணி த கொஸ்தா மற்றும் கமலா த கொஸ்தா ஆகியோர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் காணி உறுதிப் பத்திரத்தைக் கையளிக்கின்றமையைப் படத்தில் காணலாம்.

# நாடளாவிய ரீதியில் விபத்துக்கள் தொடர்ந்தும் அதிகரித்துள்ளன!

### போக்குவரத்து அமைச்சர் நிமால் தெரிவிப்பு

நாட்டில் வாகன விபத்துக்கள் தொடர்ந்தும் அதிகரித்தவாறே உள்ளன.

-இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்கள் போன்றவையே அதிகம் விபத்துக்குள்ளாகி உள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஓட்டோப் பயணங்களின்போதே பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இவற்றைத் தவிர்க்கும் நோக்கில் வாகனவிபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்'.-என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கொழும்பு துறைமுக நகர வேலைத் திட்டம்: பாதிப்படையும் மீனவர்களுக்கு நிதி உதவி!




கொழும்புத் துறைமுக நகர வேலைத் திட்டம் காரணமாகப் பாதிக்கப்படும் மீனவக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு மீன்பிடி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மீன்பிடி அமைச்சில் அமைச்சின் செயலாளர் மங்கலிகா அதிகாரி தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டது.

இதன்போது, துறைமுக நகர அபிவிருத்தி வேலைத் திட்டத்தால் பாதிக்கப்படும் மேல் மாகாண மீனவ சமூகத்தின் வாழ்வாதார அபிவிருத்திக்காக 50 கோடி ரூபா நிதியை ஒதுக்குகின்றமை தொடர்பில் பேசப்பட்டது.

இந்த நிதியில் 15 கோடி ரூபாவை 54 மீன்பிடி அமைப்புக்களுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதி 35 கோடி ரூபா நிதியை மீன்பிடி அடிப்படை வசதிகளின் அபிவிருத்திக்காக ஒதுக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், கடல் வளங்கள் தொடர்பில் நாரா நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வைத் தொடர்ச்சியாகச் செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ச)



# ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் அதிருப்தி!

கடந்த மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமை உயர் ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹூசேன் இலங்கையில் நிறை வேற்றப்பட வேண்டிய சில முக்கிய பரிந்துரைகளை முன்வைத்திருந்தார். ஆனால் இலங்கை அரசு இன்னமும் இப்பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றவில்லை.

### மங்களவின் கருத்து

இப்பரிந்துரைகளை நிறை வேற்றுவதற்கு இலங்கை உடன்பட வில்லை என பரிந்துரைகள் நிறை வேற்றப்பட்ட போது வெளியுறவு அமைச்சராக இருந்தவரும் தற்போதைய நிதி அமைச்சருமான மங்களசமரவீர தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத் தொடரில் கையளிக்கப்பட்ட அறிக்கையில் இலங்கை தொடர்பான பரிந்துரைகள் உள்ளடக்கப் பட்டிருந்தன.

மனித உரிமைகள் கவுன்ஸிலால் முன்வைக்கப்பட்ட தீர்மானம் ஒன்றை இலங்கை ஏற்றுக்கொண்டதாகவும் ஆனால்அந்தத் தீர்மானம் ராட் அல் ஹூசேனால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளில் உள்ளடக்கப்படவில்லை எனவும் சமரவீர தெரிவித்தார். போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான அனைத்துலக விசாரணையை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் இதற்குப் பதிலாக உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்றே தேவை என இலங்கை அழுத்தம் கொடுத்ததாகவும் அமைச்சர் சமரவீர தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு48 நாடுகள் ஆதரவளித்தன எனவும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் சமரவீர தெரிவித் தார். ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் இலங்கையின் தற்போதைய அரசால் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் செயற் பாடுகளை ஆதரிக்கின்றன என அமைச்சர் தெரிவித்தார்.

இராணுவத்தில் அங்கம் வகிக்கும் சிலர் பாதுகாப்புப் படைகளின் நன்மதிப்பிற்கு களங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் இவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் சமரவீர தெரிவித்தார். இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு மீறல்களுக்கு எதிராகவும் நீதியை நிலைநாட்டுவதற்கான கால வரையறைகள் மற்றும் அது தொடர்பான விவரங்கள் அடங்கிய முழுமையான மூலோபாயத் திட்டத்தை இலங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும் என செய்ட் ராட் அல் ஹூசேன் கடந்த மார்ச் மாதக் கூட்டத்தொடரில் அழைப்பு விடுத்திருந்தார். தனது அலுவலகம் தொடர்ந்தும் இலங்கைக்குத் தொழினுட்ப உதவியை வழங்கி வருவதாகவும் ஐ.நா அமைதியை நிலைநாட்டும் நிதியின் ஊடாக இலங்கைக்கு உதவிகள் வழங் கப்படுவதாகவும் உயர் ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

### ஆணையாளரின் அவதானிப்பு

"இலங்கை வாக்குறுதி வழங்கியதைப் போன்று அரசமைப்புச் சீர்திருத்தத்தை நாடாளுமன்றின் ஆலோசனையின் பேரில் மட்டுமே மேற்கொள்கிறது. பொது மக்களிடம் இது தொடர்பில் ஆலோசிக்கப்படவில்லை. அடிப்படை உரிமைகள், நீதி, நிதி, சட்டம், ஒழுங்கு, பொதுச் சேவைகள், அரசுடன் உறவு நிலை போன்ற விடயங்கள் தொடர்பில் பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அரசமைப்புச் சட்டமன்றின் ஆறு உப குழுக்களால் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் கண்டறிந்துள்ளேன்" என ஐ.நா மனித உரிமை உயர் ஆணையாளர் தெரிவித்தார்.

இலங்கையில் இடைக்கால நீதிப் பொறிமுறையை உருவாக்குவதில் தாமதம் ஏற்பட்டாலும் கூட நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான ஆலோசனைச் செயலணிக் குழுவால் வெளியிடப்பட்ட அண்மைய அறிக்கை இலங்கையில் வாழும் அனைத்து இன மற்றும் மதத்தவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளமை திருப்தி அளிப்பதாக செய்ட் ராட் அல் ஹூசேன் தெரிவித்தார்.

### கலப்பு நீதிப் பொறிமுறை

"இந்த அறிக்கையை இலங்கை அரசு முழு அளவில் பயன்படுத்தி இதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பயனுள்ள ஆலோசனைகளையும் சாத் தியமான வகையில் உபயோகிக்க வேண்டும் என்பதை நான் வலி யுறுத்துகிறேன். இலங்கையால் இணை அனுசரணை வழங்கப்பட்ட தீர்மானத்தை நிறை வேற்றுவதற்கும் கலப்பு நீதிப் பொறி முறையை உருவாக்குவதற்குமான கால வரையறை மற்றும் விவரங்கள் அடங்கிய முழுமையான மூலோ பாயத்தை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது" என செய்ட் ராட் அல் ஹூசேன் தெரிவித்தார்.

"இலங்கை அரசு பலவந்தமாக காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான சாசனம் மற்றும் மாற்றுவலுவுடையோர் தொடர்பான உரிமைச் சாசனம் போன்ற விடயங்களில் முக்கிய நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். 'அனைத்துலக நியமங்களுக்கு ஏற்ப இலங்கை தனது உள்நாட்டுச் சட்டத்தில் மிக வேகமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். காணாமற் போனோர் தொடர்பாக பணியாற்றுவதற்கான அலுவலகம் ஒன்றை உருவாக்குதல் தொடர்பில் கடந்த ஆண்டு தீர்மானம் இயற்றப்பட்ட போதிலும் இன்னமும் அது செயற்படுத்தப்படவில்லை. இந்த அலுவலகமானது பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக முக்கிய பங்கையாற்றும்" என செய்ட் ராட் அல் ஹூசேன் தெரிவித்தார்.

### மெதுவான நகர்வுகள்

பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கையை இழந்து வருவதால் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என செய்ட் ராட் அல் ஹூசேன் தெரிவித்தார். இலங்கையில் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள நிலங்கள் விடுவிக்கப்படுதலும் இதற்குள் உள்ளடங்குவதாகவும். ஆனால், இந்த நகர்வானது மிக மெதுவாகவே இடம்பெறுவதாகவும் மனித உரிமை உயர் ஆணையாளர் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை திருத்தியமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என அனைத்துலக மனித உரிமைச் சட்டத்தின் அடிப் படையிலேயே இது திருத்தியமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், இந்தப் பணிகளை இலங்கை அரசு இன்னமும் பூர்த்தி செய்யவில்லை எனவும் அல் ஹூசேன் குற்றம் சுமத்தியுள்ளார்.

"கடந்த கால மீறல்களுக்கு எதிராக நீதி நிலை நாட்டப்படாவிட்டால் எதிர்காலத்தில் இவ்வாறான மீறல்கள் தொடர்ந்தும் இடம்பெறும். மீறல்கள் தொடர்பில் நீதியை எட்டுவதற்கு சிறப்பு ஆலோசகர்கள், வெளிநாட்டு நீதிபதிகள், பாதுகாப்புச் சட்டவாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட வழக்கறிஞர்கள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய கலப்பு நீதிப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு அனைத்துலக சமூகத்தின் பங்களிப்பும் முக்கியமானது என்பது கண்டறியப்பட்ட ஒரு உண்மையாகும்"

"பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சில வழக்குகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. சுயாதீன செயற்பாடு, பொதுமக்களின் மனித உரிமைகள் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியே சட்டச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறான விடயங்கள் இனிவருங் காலங்களில் இலங்கை இராணுவத்தினர் மற்றும் காவற்துறை வீரர்கள் ஐ.நா அமைதி காக்கும் படையில் சேர்த்துக் கொள்ளப்படும் போது கருத்திற் கொள்ளப்படும்" என ஐ.நா மனித உரிமை உயர் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

### இனியும் பொறுக்கமுடியாது

"இலங்கையில் உண்மை மற்றும் இழப்பீடுகளை வழங்குவதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் இந்த முயற்சிகள் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினருடன் ஆலோசனைகள் மேற் கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது. தண்டனைகளிலிருந்து தப்பிப்பதை இனியும் பொறுக்க முடியாது என்கின்ற சமிக்ஞை அனுப்பப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். இலங்கை பாதுகாப்புப் படையினரால் இழைக்கப்பட்ட பல் வேறு மீறல்கள் தொடர்பில் முழு மையான விசாரணை செய்யப்பட்டு, அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்குவதில் இலங்கை அரசு இன்னமும் காலத்தை இழுத்தடித்து வருகிறது.

"கடந்த கால மீறல்களுக்கு எதிராக நீதி நிலைநாட்டப்படாவிட்டால் எதிர்காலத்தில் இவ்வாறான மீறல்கள் தொடர்ந்தும் இடம்பெறும். மீறல்கள் தொடர்பில் நீதியை எட்டுவதற்கு சிறப்பு ஆலோசகர்கள், வெளிநாட்டு நீதிபதிகள், பாதுகாப்புச் சட்டவாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட வழக்கறிஞர்கள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய கலப்பு நீதிப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு அனைத்துலக சமூகத்தின் பங்களிப்பும் முக்கியமானது என்பது கண்டறியப்பட்ட ஒரு உண்மையாகும்" என செய்ட் ராட் அல் ஹூசேன் தெரிவித்தார்.

இலங்கை அரசு தொடர்ந்தும் சுயாதீன ஆணைக்குழுக்கள் - குறிப்பாக நல்லாட்சியைப் பலப்படுத்துவதற்கு மிகவும் பெறுமதிமிக்க பங்கை ஆற்றிவரும் மனித உரிமைகள் ஆணைக் குழுவுடன் - ஆலோசனை மேற்கொள்ள வேண்டும் என அல் ஹூசேன் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளார்.

### ஆணையாளரின் அதிருப்தி

இலங்கை அரசின் அறிவிப்புக்களுக்கு முற்றிலும் எதிர்மாறான வகையிலேயே ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் கருத்துக்கள் உள்ளன என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜெனீவாவிற்கான இயக்குநர் ஜோன் பிஷர் தெரிவித்தார். செய்ட்டின் அறிக்கையில் இலங்கை அரசால் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எவ்வாறான பொறுப்புக்களைக் கூற வேண்டும் என்பதும் இது தொடர்பில் நீதி எட்டப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் ஐ.நா சுயாதீன வல்லுநர்கள் மற்றும் இலங்கையின் மனித உரிமை அமைப்புக்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன எனப் பிஷர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் ஏனைய நீதிசார் அதிகாரிகளை உள்ளடக்கிய நீதிப் பொறிமுறையை உருவாக்குவதற்கு இலங்கை அரசு இன்னமும் தயார்ப்படுத்தல் வேலைகளை ஆரம்பிக்கவில்லை' என்பது தொடர்பில் செய்ட்டின் அறிக்கை அதிருப்தி அடைந்துள்ளதை சுட்டிக் காட்டுவதாக பிஷர் குறிப்பிட்டுள்ளார். 2009இல் முடிவுற்ற இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் பங்குபற்றிய இரு தரப்பினராலும் இழைக்கப்பட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு இலங்கை அரசு நீதிமன்றம் ஒன்றை உருவாக்குவதில் விருப்பம் காண்பிக்கவில்லை என்பதை இலங்கை அதிபரின் அறிக்கைகள் தெளிவாகச் சுட்டி நிற்கின்றன என மனித உரிமைகள் கண் காணிப்பகம் மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்கள் போன்றன சுட்டிக்காட்டியுள்ளன.

வழிமூலம் - The Sunday leader
ஆங்கிலத்தில் - Easwaran Rutnam
மொழியாக்கம் - நித்தியபாரதி




பொன்.வேணு கிருஷ்ணா

ஜனாதிபதி இமானுவல் மக்ரோனைச் சார்ந்துள்ள பிரெஞ் ''பத்திரிகை Le Monde, ''ஒருவர் மேர்க்கெலின் முறையீட்டை ஆதரிக்கவேண்டும்,'' என்ற தலைப்பில்தலையங்கம் வெளியிட்டது. 'பிரிட்டன் வெளியேறுவது மற்றும் அமெரிக்கர்களின் பின்வாங்கல் ஆகியவை ஐரோப்பிய சமநிலையைச் சீரழித்துள்ளதாக குறிப்பிட்டது. ஆனால் ஜேர்மனி மட்டுமே அளிவி கண்டத்தின் ஒரே அதிகாரமாக ஆவதை விரும்பவில்லை.

''அங்கேலா மேர்க்கெல் 'ஐரோப்பியர் களாகிய நாம்' என்று கூறுகையில், அவர் பிரான்ஸை நோக்கிய ஒரு முறையீட்டைக் கொண்டுள்ளார், அமெரிக்கர்களும் பிரிட்டிஸும் துரும்பாக மறைந்து போனால் இதுவே அவரின் ஒரே புகலிடமாக உள்ளது'' என்று அந்தப் பத்திரிகை அறிவித்தது. மக்ரோன் இந்த முறையீட்டுக்கு சாதகமாக விடையிறுக்க வேண்டும், கோலிஸ ஆதிக்கத்திற்குள் காலங்கடத்தக் கூடாது என்று குறிப்பிட்டது.

''இந்த வெளியுறவு விவகாரங்களுக்காக ஜனாதிபதி ட்ரம்பைக் குறை கூறுவது எளிதானதும், பொருத்தமானதும் தான்'' என்று எழுதிய கட்டுரையாளர் கீடியன் ராஹ்மன்,

எவ்வாறிருப்பினும் மேர்க்கெலின் உரையை பிரிட்டனின் பைனான்சியல் டைம்ஸ் கூர்மையாகத் தாக்கியது. ''இந்த வெளியுறவு விவகாரங்களுக்காக ஜனாதிபதி ட்ரம்பைக் குறைகூறுவது எளிதானதும், பொருத்தமானதும் தான்'' என்று எழுதிய கட்டுரையாளர் கீரிடியன் ராஹ்மன், ''ஆனால் மேர்க்கெல் அவரது எச்சரிக்கையான சொல்லாடல் களுக்கு இடையிலும், அட்லாண்டிக் கூட்டணியை ஒரு நிரந்தர முறிவுக்குள் கொண்டு செல்லும் ஓர் அபாயகரமான பிளவை அதிகரிக்க அச்சுறுத்தும் அறிக்கை விடுத்து, பொறுப்பற்ற விதத்திலும் நடந்துள்ளார்'' என்று குறிப்பிட்டார்.

அமெரிக்காவுடன் மட்டுமன்றி, மாறாக பிரிட்டனுடனும் மேர்க்கெல் வேண்டுமென்றே பிளவை ஆழப்படுத்தி வருவதாக பைனான்சியல் டைம்ஸ் மேர்க்கெலைக் குற்றஞ் சாட்டியது. ராஹ்மன் தொடர்ந்து குறிப்பிடுகையில், ''மேர்க்கெலின் அரசாங்கம் இப்போதைய மோதல் உணர்வோடு பிரிட்டன் வெளியேறு வதன் மீதான பேரம்பேசல்களை நடத்தினால் -ஒரு வர்த்தக உடன்படிக் கையை விவாதிப்பதற்கு முன்னரே கூட, பெரும் முன் தொகைக்கு இங்கிலாந்து உறுதியளிக்க வேண்டுமெனக்கோரி- அவர் சுயதேவைக்கான தீர்க்க தரிசனத்துடன், பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இடையே காலத்திற்கும் நீடிக்கும் விரோதங்களை உருவாக்கும் அபாயத்தை முன்னெடுக்கிறார்'' என்றார்.

Frankfurter Allgemeine Zeitung (FAZ) இல் வெளியான ஒரு கட்டுரை, இவையெல்லாம் ஜேர்மன் அரசாங்கத்தின் திட்டங்கள் என்று குறிப்பிடுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன்வெளியேறுவதையும் மற்றும் அமெரிக்காவுடனான பிளவையும் அது, ஜேர்மன் மேலாதிக்கத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்தை ஓர் இராணுவ மற்றும் அரசியல் கூட்டணியை மீள ஒழுங்கமைப்பதற்கான மற்றும் புதிய, சுதந்திரமான வல்லரசுக் கொள்கையைத் தொடங்குவதற்குமான ஒரு சந்தர்ப்பமாக பார்க்கிறது.

''ஐரோப்பாவிற்கான ஓர் இரகசியத் திட்டம்'' என்ற தலைப்பின் கீழ் Frankfurter Allgemeine Zeitung எழுதுகையில், ட்ரம்ப் உடனான பிளவுக்குப் பின்னர் மேர்க்கெல்'' பல்வேறு முகப்புகளை'' கொண்ட ''திட்டம் எண் 2: ஐரோப்பா'' ஐ செயற்படுத்துகிறார். அகதிகள் பிரச்சினை அதிமுக்கியமாக இருந்தது: ''சான்சிலர் அலுவலகம், மத்திய தரைக்கடலில் விமானத்தை நிறுத்துவதை ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்காலத்திற்கு அதிஅவசியமானதாக பார்க்கிறது.''

அப்பத்திரிகைகண்டறிந்த இரண்டாவது புள்ளி, ''பாதுகாப்பு''. மேர்க்கெல் ''நிறையப் பணம் செலவிடவும்'' மற்றும் ''படைகளுக்கு இடையிலான கூட்டுறவுத் தடையின்றி தொடரவும்'' விரும்புகிறார். பிரிட்டனால் விடாப் பிடியாக எதிர்க்கப்பட்ட ஓர் ''ஐரோப்பிய படையின்'' கருத்துரு, இந்தக் காரணத்திற்காக இதுவரையில் கவனமாகத் தவிர்க்கப்பட்டு வந்தது என்பதையும் அப்பத்திரிகை சேர்த்துக் கொண்டது.



**நேட்டோவில் உள்ள சிறிய அங்கத்துவ நாடுகளது இராணுவ தகைமைகளை பலப்படுத்தவும் மற்றும் ஓர் ஐரோப்பியபடைப் பலத்தை உரு வாக்குவதற்கான நடைமுறை மைல் கற்களை ஸ்தாபிக்கவும் அவற்றை ஒரு பிடிப்பாக கொண்டு ஜேர்மன் படை அதன் சேவைகளை வழங்கி வந்ததாக FAZ எழுதி யது.**

நேட்டோவில் உள்ள சிறிய அங்கத்துவ நாடுகளது இராணுவத் தகைமைகளைப் பலப்படுத்தவும் மற்றும் ஓர் ஐரோப்பியப் படைப் பலத்தை உருவாக்குவதற்கான நடைமுறை மைல் கற்களை ஸ்தாபிக்கவும் அவற்றை ஒரு பிடிப்பாக கொண்டு ஜேர்மன் படை அதன் சேவைகளை வழங்கி வந்ததாக FAZ எழுதியது. நெதர்லாந்து, பிரான்ஸ் மற்றும் போலந்து ஆகியவற்றுடன் ஏற்கனவே கூட்டுப் படைப் பிரிவுகள் உள்ளன என்பதுடன், ரோமானியா மற்றும் செக்குடியரசு ஆகியவற்றுடனும் உடன்படிக்கைகள் உள்ளன.

''பொருளாதார மற்றும் செலாவணி ஒன்றியம்'' என்பதை FAZ மூன்றாவது புள்ளியாக குறிப்பிட்டது. இந்த விடயத்தில், யூரோ மண்டலத்திற்கான



பொருளாதார அரசுமுறை மற்றும் கூட்டுப் பத்திரங்களை (யூரோ பத்திரங்கள்) உருவாக்குவதன் மீது ஜேர்மன் அரசாங்கம் மக்ரோனுடன் உடன்பட தயாராக இருந்தது, ஆனால், கூட்டு பத்திரங்களைப் பொறுத்த வரையில், ''கட்டமைப்புச்சீர்திருத்தங்களை'' ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் மட்டும் -அதாவது சமூக நலத் திட்டங்கள் மற்றும் வேலையிட நிலைமைகள் மீதான கூடுதல் தாக்குதல்களின் அடிப்படையில்- அதைச் செய்யத் தயாராக இருந்தது. ஜேர்மனிக்கான ஒரு விட்டுக்கொடுப்பாக, ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவராக மரியோ திராஹியை அடுத்து ஜென்ஸ் வைட்மானை நியமிக்க விவாதிக்கப்பட்டு வருவதாகவும் அப் பத்திரிகை அறிவித்தது.

Spiegel Online பத்திரிகை FAZ ஐ விட இன்னும் அதிகமாக சென்று, புதிய புவிசார்மூலோபாயக் கூட்டணிகளுக்கான சாத்தியக்கூறுகளை உயர்த்தியது. பொருளாதாரம் மற்றும் அரசியல் இதழியல் பேராசிரியரான கட்டுரையாளர் ஹென்றிக் முல்லெர், அமெரிக்காவிற்கு எதிராக ஓர் ஐரோப்பிய-சீன மூலோபாய பங்காண்மைக்கு முறையிட்டார்.

அவர் எழுதினார், ட்ரம்ப் வார்த்தைகளால் சீறுவது, ''அமெரிக்கா இனியும் சார்ந்திருக்கக்கூடிய பங்காளியாக இல்லை'' என்பதையே காட்டுகிறது. தலைவராக இருக்கும் அமெரிக்காவின் பாரம்பரிய பாத்திரத்திலிருந்து ட்ரம்ப் பின்வாங்கியமை, ஒரு நிலை குலைக்கும் தாக்கத்தைக் கொண்டிருந்தது. இதன் ஒரு விளைவாக, பூகோள பொருளாதாரக் ''கொள்கை குழப்பத்திற்குள்ளானது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனா ஆகிய ஏனைய இரண்டு மிகப்பெரிய பொருளாதாரங்களும் சர்வதேச பிரச்சினைகளைத் தீர்க்க புதிய பங்காளிகளை எதிர்நோக்கி வருகின்றன.''

உலகளாவிய வர்த்தகம் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றக் கொள்கையே தீவிர ஐரோப்பிய-சீனகூட்டுறவுக்கான'' மிக முக்கிய பகுதிகளாகும் என்று முல்லெர் எழுதினார். ''மேற்கின் முன்னணி சக்தியான'' அமெரிக்கா, ஒரு சமயம் ''போருக்குப் பிந்தைய சகாப்தத்தின் பூகோளமயப்பட்ட பொருளாதார அமைப்புகளை'' -சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக அமைப்புக்கு முன்பிருந்த அமைப்பான வரிக்கும் மற்றும் வர்த்தகத்திற்குமான பொது உடன்பாடு (GATT ஆகியவற்றை- ஆதரித்திருந்தது. இப்போது ''ஐரோப்பா மற்றும் சீனாவே பூகோள நெறிமுறை வெற்றிடத்தைக் கூட்டாக நிரப்ப'' வேண்டும் என்றார்.

**ஜேர்மன் அரசாங்கமும் ஐரோப்பிய ஒன்றியமும் இரண்டுமே அவற்றின் பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளை விரிவாக்க தீவிரமாக முனைந்து வருகின்றன**

தட்பவெப்ப மாற்றக் கொள்கை மீதான கூட்டுறவை முல்லெர் பரிந்துரைப்பது, ''சுற்றுச்சூழல் பற்றுகோள்'' காரணமாக அல்ல'' தூய பொருளாதார நலன்களில்'' இருந்தாகும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமாக உற்பத்தித்திறனின் வேகமான வளர்ச்சி, பெரிய போட்டித்திறன்மிக்க எதிர்கால இலாபங்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. இதற்கு நீண்டகால முதலீடுகள் அவசியமாகும், ட்ரம்ப் பின்பற்றி வரும் கொள்கை மாற்றங்களும் தாறுமாறான போக்குகளும் இந்தக் கணக்கீட்டின் அடித்தளத்தை அழித்து விடக்கூடுமென முல்லெர் அறிவிக்கிறார்.

ஜேர்மன் அரசாங்கமும் ஐரோப்பிய ஒன்றியமும் இரண்டுமே அவற்றின் பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளை விரிவாக்க தீவிரமாக முனைந்து வருகின்றன. பூகோளம் எங்கிலும் வர்த்தக உடன்படிக்கைகளை முடிவு செய்ய ஐரோப்பிய ஒன்றியம், ட்ரம்பின் பாதுகாப்பு வாதத்தைச் சுரண்டி வருகிறது. இப்போது 20நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, பல அரச அமைச்சர்களுடன் பேர்லின் விஜயம். சீன பிரதமர் லு கெக்கியாங் கலந்து கொள்ளும் ஐரோப்பிய ஒன்றிய-சீன உச்சி மாநாடு புருசெல்ஸில் நடக்க உள்ளது.

பிரதான சக்திகளுக்கு இடையிலான மோதலும், புதிய கூட்டணிகள் உருவாவதும் 1890 மற்றும் 1914 க்கு இடையிலான காலகட்டத்தை நினைவூட்டுகின்றன, அப்போது பொருளாதார மற்றும் அரசியல் போட்டிகளின் விளைவாக 1914 முதலாம் உலக போருக்குள் பிரதான சக்திகளை உள்ளிழுத்த அணிகள் இவ்வாறு தான் உருவாயின. அதன் ஆரம்ப காலங்களைப் போலவே, பூகோளமயப்பட்ட முதலாளித்துவ ஒழுங்கமைப்பின் முரண்பாடுகள் மனித இனத்தைப் பேரழிவுகளுக்குள் மூழ்கடிக்க அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்தை போருக்கு எதிரானபோராட்டத்துடன் இணைக்கும் தொழிலாள வர்க்கத்தின் ஒரு சுயாதீனமான இயக்கம் மட்டுமே இதைத் தடுக்க முடியும்.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

அத்தியாயம் - 1



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.


அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – அவுஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்டுக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

04



## புதிய தரிசனங்கள்

குளிர் நீர் படகு மீது சவுக்கடியாக விழுந்து அவர்களைத் தெப்பமாக நனைத்த போதும் கடமையில் கண்ணாக நின்று, செல்லும் திசையின் இலக்கைக் குறி வைத்து, படகை நுட்பமாக இயக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இளம் போராளிகள்தான்.

ஆயினும், வயதுக்கு மிஞ்சிய சாமர்த்தியமும் தன்நம்பிக்கையும் அவர்களிடம் இருந்தன. சினந்து எழும் அலைகளின் மிரட்டல்களுக்குக் கிறங்காது, கடலும் படகும் ஆட, தாமும் இலாவகமாக அந்த ஆட்டத்துக்கு ஒத்திசைவாக அசைந்தவாறு அவர்கள் படகோட்டினார்கள். தளபதி சூசை காட்டிய திசையிற் பார்த்தோம். எமக்குப் பின்னால், தூரத்திலே மங்கலாக இரண்டு கரும் புள்ளிகள் தெரிந்தன. இரண்டும் படகுகள். எமது வேகத்துக்கு அனுசரணையாக வந்துகொண்டிருந்தன. நாம் சென்றுகொண்டிருந்தமை போன்ற அதே மாதிரியான படகுகள். ஆனால், தூரத்தில் சிறிய உருவத்தில் தெரிந்தன. துள்ளிப் பாய்ந்து, முல்லைத்தீவுக் கடற்பரப்பை உழுதபடி வந்து கொண்டிருந்தன அந்தப் படகுகள். எமது காவற் கவசங்கள் இவை. துணிச்சல், தியாகம், அர்ப்பணிப்பு - அவற்றோடு வெடிமருந்துகளும் நிரம்பிய படகுகள் அவை. அவர்கள் கடற் கரும்புலிகள். எமது பாதுகாப்புக்காக அனுப்பப்பட்டவர்கள்.

நாம் உயிர் வாழவேண்டும் என்பதற்காக, தமது உயிரையும் கொடுக்கத் தயாராக வந்தவர்கள். எமது பயணத்துக்கு அச்சுறுத்தலாகச் சிறிலங்கா கடற்படைப் படகுகள் வருமேயானால் அவற்றோடு மோதி, அவற்றை அழித்தொழிக்கும் முடிவோடு வந்து கொண்டிருந்த ஆண்களும் பெண்களும் இவர்கள். எமது உயிர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக எத்தகைய தியாகத்தையும் புரிய மக்கள் தயாராக இருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும் போது, இந்த அன்புக்கும், மதிப்புக்கும் தகுதியுடையவர் அல்லர் என நான் உணர்ந்து கொண்டமை இதுதான் முதற் தடவையல்ல. தளபதி சூசையை எனக்கு நீண்டகாலமாகத் தெரியும். சிங்களக் கடற்படையால் எழக்கூடிய ஆபத்துகள் பற்றி அவர் நன்கறிவார் என்பதும், அப்படியான ஆபத்தான சூழ்நிலை எழுந்தால் அதனைச் சமாளித்து வெற்றிகொள்ளும் திறனாற்றல் அவரிடமுண்டு என்பதிலும் எமக்கு அசையாத நம்பிக்கை இருக்கிறது. ஆனால், எனது கணவர் பாலாவைப் பொறுத்தவரை அவருக்கு மேலதிகமாக ஓர் ஆபத்து இருந்தது. அது அவருக்கு உள்ளே, அவருடைய உடலில் இருந்தது.

பாலாவுக்கு சிறுநீரக நோய். சிறுநீரகச் செயற்பாடு பாதிக்கப்பட்டு நாட்பட்டிருந்த வியாதி திடீரென சமீபத்தில்தான் கடுமையாக்கி அவர் தப்பிப் பிழைத்திருந்தார். அவர் பிழைத்தமை அதிசயம்தான். அவரைப் பராமரித்து வந்த மருத்துவர்களின் கருத்து அதுதான். இருபத்தைந்து ஆண்டுகளாக நீடித்த நீரிழிவு நோய் அவரை நன்றாகப் பதம் பார்த்து விட்டது. அவரது நோயின் நிலைமையைச் சோதித்துப் பார்க்கக் கூடிய மருத்துவக் கருவிகள் எவையும் முல்லைத்தீவில் இருக்கவில்லை. இதனால் அவரைச் சோதிக்கவோ, அவரது நோய் எத்தகையை கடுமை நிலை கண்டிருக்கின்றது என்ற விளக்கம் பெறவோ முடியவில்லை. அறுவைச் சிகிச்சை செய்த பின்னர் தான் சிறுநீரகம் பெருமளவு இயங்கவில்லை என்பதும், சிறுநீரக முடக்கம் மிக மோசமாக இருந்தது என்பதும் எமக்கு முழுமையாகத் தெரியவந்தது. அவருடைய இடது சிறுநீரகம் ஒரு தேங்காய் அளவுக்கு உப்பி இருந்தது என்பதும், எந்த நேரமும் வெடித்துப் பிளக்கும் நிலையில் இருந்தது என்பதும் எமக்கு முன்னரே தெரிந்திருந்தால், மருத்துவப் பராமரிப்பும், சிகிச்சைக் கருவிகளும் இல்லாமல் ஆபத்து நிறைந்த கடற் பயணத்தை மேற்கொள்ள எமக்குத் துணிவு வந்திருக்குமோ தெரியாது.

முல்லைத்தீவில் பாலாவின் சிறுநீரகம் கடுமையாகப் பாதிப்படைந்து, அதனால் உயிராபத்து ஏற்பட்டு, அதிலிருந்துஅவர் தப்பிப் பிழைத்த போதும் அவரது உடல்நிலை மிக மோசமாகவே இருந்தது. அதிஷ்ட தேவை அவர் பக்கம் இருந்ததால்தான் அவர் தப்பிப் பிழைத்தமையோடு,மிகவும் நீண்ட, ஆபத்தான வங்காள வரிகுடாக் கடற் பயணத்தையும் சமாளித்தார் என்று கூறவேண்டும். வன்னி என்றால் அங்கே மலேரியா, நெருப்புக் காய்ச்சல், மஞ்சள் காமாலை, விஷக்காய்ச்சல்; இனி எந்த நாளும் வரக்கூடிய வெவ்வேறு நோய்கள்! இவைகளில் சுகதேகிகளுக்கே அங்கு ஆபத்து ஏற்பட்டு விடுகின்றது. சிறுநீரக நோயால் உயிர் ஆபத்து நிலையில் இருந்த பாலாவுக்கு



இவை நிச்சயமாகச் சாவைக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனபடியால், ஒரு பக்கம் அவருடைய சிறுநீரக, நீரிழிவு வியாதிகள். மறுபக்கம் வன்னி வெப்பச் சூழலில் எழக்கூடிய நோய் ஆபத்துக்கள். பாலாவின் உடல் நலம் வேகமாக மோசம் அடைகின்றமையை அவதானித்த இயக்க உறுப்பினர்களும் சரி, பொதுமக்களும் சரி, அவர் பயணம் செய்யக் கூடிய நிலையில் இருக்கும் போதே, எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு விரைவாக அவரை வெளியேற்றிவிட வேண்டும் என்று ஒரே குரலில் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

இதனால் ஒரு புறம் பிரிவுக் கலக்கம்; மறுபுறம் நோய் அச்சம். இவற்றுக்கு மத்தியில்தான் தமிழீழத்தை விட்டு நாம் கடல் மார்க்கமாக வெளியேறுவதற்குப் பிரபாகரன் ஏற்பாடு செய்தார். இப்படியான பயணத்தில் ஆபத்து இருப்பது எமக்குத் தெரியும். ஆனால், வேறு வழி இருக்கவில்லை. ஒன்றில் முல்லைத்தீவில் தங்கி நின்று சாவைச் சந்திக்க வேண்டும். அல்லது, ஆபத்தான பயணத்தை மேற்கொள்ள வேண்டும். சில சமயம் வெளிநாட்டில் சரியான மருத்துவப் பராமரிப்புப் பெற்று, அவர் மேலும் சிறிது காலம் உயிர்வாழ இயலுமாய் இருக்கும் என்பதையும் சிந்தித்தோம். ஆனால், சமுத்திரத்தில் இறங்கியதும் இரக்கமற்ற கடுமையான கடற்சூழல் பாலாவை அடுத்த ஆபத்தான கட்டத்துக்குத் தள்ளிவிட அதிக நேரம் பிடிக்கவில்லை. ஆர்ப்பரித்துக் குமுறும் அந்தப் பென்னம் பெரிய கடலில், எமது சின்னஞ் சிறிய படகு, முக்கி முக்கித் தத்தளித்தபடி முன்னேறிக்கொண்டிருந்தது. அடிவானத்தில் ஒளி மங்கிக் கொண்டிருந்தது. அந்த நேரம் பாலாவின் முகம் வெளிறத் தொடங்கியது. இயலாமை அதிகரிப்பது தெரிந்தது. அவர் வயிற்றை எக்கி, எக்கி வாந்தி எடுத்துக்கொண்டிருந்தார். அதனைக் கடற்புலி வீரர்கள் பாத்திரங்களில் ஏந்திக் கொட்டினார்கள். அவருடைய நெற்றியையும் தாங்கிப் பிடித்தார்கள். எனக்கும் கடல் குமட்டல் குணம். ஆற்றாமை என்னையும் தொற்றிக் கொண்டது. கடற்பயணக் கனதி என்னையும் தாக்கியது. இந்தப் பயணம் பற்றி நான் கொண்ட அச்சங்கள் இப்பொழுது மெய்யாகி விட்டமையை உணர்ந்தேன். நாம் புறப்படுவதற்கு முன்னரே, அநேகமாக மூன்றுவகை உடல்நல ஆபத்துக்கள் பாலாவுக்கு வரலாமென அறிந்து கொண்டேன். அவருடைய இரத்த அழுத்த மாத்திரைகள் தாழ்ந்த குருதி அழுத்தத்தை ஏற்படுத்தலாம். அடுத்தது கடல் வாந்தியால், உடலில் நீர் வற்றி, சிறுநீரக வியாதியைக் கடுமையாக்கிவிடலாம். இனி, அளவுக்கு மிஞ்சி வாந்தி எடுத்தால் குருதியோட்டத்தில் 'குளுக்கோஸ்' குறைந்து மயக்க நிலை ஏற்படலாம். எனக்கும் குமட்டல். தியங்கிப் போனேன். இடையில் விழித்து அவரை நிமிர்ந்து பார்த்தேன். அவரது நெற்றியில் வியர்வைத் துளிகள். இது எந்த வகையான உடல் நல ஆபத்து? அனுமானிக்க முடியவில்லை. சூசையின் பார்வை ஏதாவது செய்யும்படி என்னைக் கெஞ்சியது. பாலா கையை நீட்டினார். 'குளுக்கோஸ்' குறைவு ஏற்பட்டிருப்பதை சைகையால் காட்டினார். தமக்குச் சீனி வேண்டும் என்பதையும் உணர்த்தினார். மிகத் தேவையான மருந்து அது. நான் ஆயத்தமாகக் கொண்டு சென்ற பொதியில் இருந்து சீனி எடுத்துக் கொடுத்தேன். அதை நக்கிய சில நிமிடங்களில் அவருடைய நெற்றி வியர்வை உலர்ந்தது. அந்த நேரம் என்னால் இயன்றமை அவ்வளவு தான். படகு ஆடிய ஆட்டத்தில் மிக எளிமையான மருத்துவ உதவியைக் கூட என்னால் வழங்க முடியவில்லை. படகின் பக்கவாட்டில் பாலா சரிந்து படுத்தார். ஆனால், வெகுவாக நைந்து போயிருந்தார். தமது நெற்றிக்கு முன்னே அவர் கையைச் சோர்வாக சுழற்றியபோது, அவருக்குத் தலை கிறுகிறுக்கிறது என்பதும், இரத்த அழுத்தம் வடிந்திருக்க வேண்டும் என்பதும் எனக்குப் புரிந்தன. சில நிமிடங்கள் வயிற்றை மீண்டும் எக்கப் போகிறார் என்பதும் அதன் பின் களைத்து விழப் போகிறார் என்பதும் தெரிந்தன. அவருடைய உடலும் சோர்ந்து, துவண்டு போய் இருந்தது.

தொடரும்...

இரா. சங்கையா,
யாழ்.மாநகரசபை முன்னாள் உறுப்பினர்,
நிர்வாகச் செயலாளர், த.வி.கூ.

# கிளிநொச்சியை தனி மாவட்டமாக்கிய பெருந்தலைவர் ஆனந்தசங்கரி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய வீ.ஆனந்த சங்கரிக்கு இன்று அகவை 84. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம் வீ.ஆனந்தசங்கரிக்கு இன்று 15.06.2017 அகவை எண்பத்தி நான்கு (84). மற்றவர்களைப் போலசாதாரணமாக அவரது அரசியல் வாழ்க்கை ஆரம்பிக்கவில்லை. மிகப் பெரிய போராட்டங்கள் மூலமாகவே அவர் தனது அரசியலில் வெற்றிபெற வேண்டியிருந்தது. கிளிநொச்சியில் அவர் ஓர் ஆசிரியராகவே காலடி எடுத்து வைத்தார். அதுவும் கிளிநொச்சித் தொகுதியிலேயே் மிகவும் பின் தங்கிய பகுதியாக இருந்த பூநகரிப் பிரதேசத்திலேயே அவர் தனது ஆசிரியப் பணியை ஆற்றினார்.

**தனியான மாவட்டமாக கிளிநொச்சியை ஆக்கினார்**

அங்குள்ள மாணவர்கள் கல்வி கற்பதில் இருந்த இன்னல்கள் மற்றும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில் உள்ள சிரமங்கள் என்பவை மட்டுமல்லாது, மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் வசதி வாய்ப்புகள் உள்ள மிகப் பிரபல்யம் பெற்ற பாடசாலைகளோடு போட்டி போட்டுத் தான் புள்ளிகளைப் பெற வேண்டும் என்ற நிலையும் இருந்து வந்தது. பின்னாளில் அவர்கிளிநொச்சித் தொகுதியை தனி மாவட்டமாக மற்றுவதற்கான முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்றாக அமைந்தது.

உழைக்கும் வர்க்கத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடி வந்த லங்காசமசமாஜக்கட்சியின்உறுப்பினராக அவர் செயற்பட்டு வந்தார். இடதுசாரிக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அவரால் கிளிநொச்சித் தொகுதியில் ஏழை விவசாயிகள்படும்துன்ப,துயரங்களைப் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. அந்தக் காலத்தில் கிளிநொச்சியில் அநேகமான காணிகள் பெரும் கமக்காரர்கள் மற்றும் நிலச்சுவாந்தர்களின் கைகளிலேயே இருந்தன. அவர்களிடம் வேலைக்குச் செல்பவர்கள் அடிமைகள் போல நடத்தப்பட்டனர்.

அதுமட்டுமல்ல, சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தனர். இரணைமடு குளத்து நீர் பெரும் கமக்காரர்களுக்கு மட்டுமே பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனால் ஏழை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனை உணர்ந்த ஆனந்த சங்கரி,ஏழை விவசாயிகளின் துயர் துடைக்க அவர்களை இணைத்துக் கொண்டு களத்தில் இறங்கிப் போராட்டங்களை நடத்தினார்.

அதன் விளைவாக இரணைமடு குளத்து நீர் ஏழை விவசாயிகளின் காணிகளுக்கும் குடியேற்றத்திட்ட மேட்டுக் காணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

**ஏழை மக்களின் பங்காளன் சங்கரி**

ஏழை மக்களின் பங்காளனாக அவர் திகழ்ந்தார். கிளி நொச்சித் தொகுதிமக்கள் அவரை கிராம சபைத் தலைவராக, பட்டினசபைத் தலைவராக, நாடாளுமன்ற உறுப்பினராக ஏற்றுக் கொண்டார்கள். தன்னந்தனியாக தனி ஆளாக - கிளிநொச்சித் தொகுதிக்கு வந்த ஆனந்தசங்கரியைக் கிளிநொச்சித் தொகுதி மக்கள் படிப்படியாக தங்களின் தலைவனாக ஏற்றுக் கொண்டார்கள். இது மக்கள் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கைக்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசாகும். தன் மீது மக்கள் வைத்த நம்பிக்கைக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் உருவானது தான் கிளிநொச்சி தனி மாவட்ட கோரிக்கை ஆகும்.


இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டவுடன் பலர் எள்ளி நகையாடினார்கள். கேட்டது தனி நாடு, இப்போது கேட்பது தனிமாவட்டமா? என்று கேள்வி எழுப்பினார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எதிர்ப்பைக் காட்டினார்கள்.

கட்சிக்குள்ளும் எதிர்ப்பு. பிரதேசவாதம் என பலர் எரிந்து விழுந்தார்கள். ஆனால் சரியான புள்ளி விவரங்களுடன் ஆதாரங்களை முன்வைத்து நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்து எல்லோரினதும் வாய்களையும் அடைத்து, கிளிநொச்சியைத் தனி மாவட்டமாக உருவாக்கினார். அதன் விளைவாக பின் தங்கிய மாவட்டமான கிளிநொச்சியில் இருந்து அதிகளவான மாணவர்களுக்கு பல்கலைக் கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

**தனி நிர்வாக அலகை உருவாக்கியவர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பட்டதாரிகள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள் எனப் பலர் உருவாகிவிட்டார்கள். அதுமட்டுமல்லாமல், மாவட்ட செயலகம், மாவட்ட வைத்தியசாலை, மாவட்டக் காணி அலுவலகம் என கிளிநொச்சி தனி அந்தஸ்தை அடைந்து விட்டது. இதற்கெல்லாம் வித்திட்டவர் ஆனந்த சங்கரிதான் என்பதை யாராலும் மறக்கவோ மறைக்கவோ முடியாது.

1973 ஆம் ஆண்டு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தர மாணவர்களான நான் உட்பட எனது நண்பர்கள் அனைவரும் இரவில் தங்கிப் படிப்பதற்காக தனது அலுவலகத்தில் இடத்தை ஒதுக்கித் தந்தார். அப்போது அவரின் வீடும் அலுவலகமும் ஒன்றாகவே இருந்தன.



அதிகாலை நான்கு மணிக்கு அலாரம் வைத்து எங்களை எழுப்பி விடுவார். அவர் துணைவி எங்களுக்கு பனங் கட்டியுடன் தேநீரும் தருவார். நாங்களும் மிகவும் நன்றாகவே படித்தோம்.

முதல் முறையாக அந்த வருடம் தான்கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான பிரிவில் பலர் சித்தியடைந்தனர். அதில் விஞ்ஞான பாடங்கள் உட்பட ஐந்து திறமைச் சித்திகளுடன் நான் முதல் மாணவனாக சித்தியடைந்தேன். இது ஆனந்தசங்கரி எங்களுக்கு கொடுத்த ஊட்டச்சத்தாகும். மாணவர்களுக்காகத் தனது அலுவலகத்தையே கொடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும். அந்தளவுக்கு கல்வியால் சமூகத்தை உயர்த்த அயராது பாடுபட்டார்.

யுத்தம் ஒன்று உருவாகுமேயானால் அதன் இழப்பு அதிகம் என்பதைத் தீர்க்க தரிசனமாக உணர்ந்து கொண்ட ஆனந்தசங்கரி, விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், அரசுக்கும் அடிக்கடி அறிவுரை கூறி கடிதங்களை எழுதி வந்தார். புலிகளுக்குக் கூறிய அறிவுரைகளும் ஆலோசனைகளும் ஏனையவர்களால் புலிகளுக்குத் தவறான வியாக்கியானங்கள் கொடுத்து பெரிது படுத்தப்பட்டன.

அதன்விளைவால் அவர் புலிகளுக்கு எதிரியாகக் காட்டப்பட்டார். அதனால் உயிருக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது. அதனைப் பொருட்படுத்தாமல் துணிச்சலுடன தனது கருத்துக்களை வலியுறுத்தி வந்தார். வன்முறைக்கு எதிராகக் குரல் கொடுத்தமைக்காகவும், சகிப்புத் தன்மையுடன் போராடியமைக்காகவும் யுனெஸ்கோ அமைப்பால் 'மதன்ஜித்சிங்' விருது வழங்கி சர்வதேசத்தால் கௌரவிக்கப்பட்டார் சங்கரி.

> 'யதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்ற வார்த்தை அவருக்கே பொருந்தும். தமிழ் மக்கள் தமது அரசியல் தலைமைகளிடம் இருந்து சரியான பதிலை எதிர் பார்க்கின்றமை கிடையாது. அவர்களுக்குத் தேவை, அந்த நேரத்தில் அவர்களை சந்தோஷப் படுத்தக் கூடிய உணர்ச்சிகரமான வார்த்தைகளே! ஆனால், ஆனந்த சங்கரி நடைமுறைக்குச் சாத்தியமான, சரியான கருத்துக்களை எவருக்கும் அஞ்சாமல் துணிச்சலுடன் கூறிவந்தார். மக்கள் இதனைப் புரிந்து கொள்ளவில்லை.

**உண்மையைக் கூறியவர்**

சர்வதேசத்துக்குத் தெரிந்த அவரின் நிலைப்பாடு தமிழ் மக்களுக்குத் தெரியாமல் போனமை ஒரு புதிராகவே இன்றும் உள்ளது. ஒரு சமூகத்திடம் பொய்களைக் கூறி வெற்றிபெறுவதை விட, உண்மையைக்கூறி தோல்வியைத் தழுவிக் கொள்வது மேலானதாகும் என்ற ஓர் அறிவாளியின் கூற்றுதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

'யதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்ற வார்த்தை அவருக்கே பொருந்தும். தமிழ் மக்கள் தமது அரசியல் தலைமைகளிடம் இருந்து சரியான பதிலை எதிர் பார்க்கின்றமை கிடையாது. அவர்களுக்குத் தேவை அந்த நேரத்தில் அவர்களை சந்தோஷப்படுத்தக் கூடிய உணர்ச்சிகரமான வார்த்தைகளே. ஆனால், ஆனந்த சங்கரி நடைமுறைக்கு சரத்தியமான, சரியான கருத்துக்களை எவருக்கும் அஞ்சாமல் துணிச்சலுடன் கூறிவந்தார். மக்கள் இதனைப் புரிந்து கொள்ளவில்லை.

இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் இன, மத பேதமின்றி ஒற்றுமையுடன் வாழ்கின்றமையையே சங்கரி விரும்புகின்றார். அதற்காகவே தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து அவர் செயற்படுகின்றார். அதனால் தான் அவர் எப்பொழுதும் சகல இன, மத மக்களும் ஒற்றுமையுடன் வாழவும், மாநிலங்களுக்கு காணி, பொலிஸ் அதிகார முடைய இந்திய முறையிலான ஒரு தீர்வுத் திட்டம் கிடைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றார்.

இனிவரும் காலங்களிலாவது அவருடைய சரியான கருத்துக்களை ஏற்றுக்கொண்டு மக்கள் செயற்படுவார்களேயானால் எமது மக்கள் எதிர் நோக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியும்.

மக்களுக்காக தனது வாழ்வையே அர்ப்பணித்து செயற்படும் வீரசிங்கம் ஆனந்தசங்கரி, இன்னும் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்ந்து தமிழ் மக்களுக்கு சேவை செய்ய, எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். ★

## பண்டாரவளையில் அனர்த்த எச்சரிக்கை!

பண்டாரவளையின் ஒரு பகுதியிலுள்ள வீடுகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் அனர்த்த எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தந்திரிய பிரதேசத்திலுள்ள சில வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள நிலப்பரப்பு அனர்த்த அபாயத்துக்குரிய பகுதி என்று தெரிவித்து, அங்குள்ள மக்களை வெளியேறுமாறு நகர சபை அறிவித்தல் விடுத்துள்ளது.

இதேவேளை அந்தப் பகுதியில் உள்ள சில வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் அண்மையில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

# எம்.பிக்களின் சொத்து விவரம் வெளியிடப்படுதல் கட்டாயம்

## புதிய நியதியைக் கொண்டுவருகிறது அரசு

கொழும்பு, ஜூன் 15

நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களது சொத்து விவரங்கள் மற்றும் நிதி நிலைமைகள் பற்றிய விவரங்களை நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நியதி ஒன்றைக் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி அவர்களது தந்தை, தாய், மனைவி மற்றும் பிள்ளைகள் ஆகியோரின் சொத்து விவரங்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று இந்தப் புதிய நியதியில் குறிப்பிடப்பட உள்ளது.

நாடாளுமன்ற உறுப் பினர்களால் வழங்கப்படும் சொத்து விவரங்கள் மற்றும் அறிக்கைகளைக் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதிப் பொறுப்புக்கள் தொடர்பான ஓர் ஆவணத்தை நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆவணத்தில் காணப்படும் விவரங்கள் தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தின் அடிப்படையில் வெளிநபர்கள் பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கு விதிகளின் அடிப்படையில் இந்த ஆவணங்கள் பேணப்பட வேண்டியமை கட்டாயமாக்கப்பட உள்ளது.

மனச்சாட்சிக்கு அமைய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் விவரங்களை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பி னர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்களின் காணி ஆதனங்கள், கட்டடங்கள், ஏனைய அசையும், அசையாச் சொத்துக்கள், பங்குச் சந்தை, பங்கு விவரங்கள், பரிசில்கள் உள்ளிட்ட அனைத்துச் சொத்து பொறுப்புக்கள் பற்றிய விவரங்களையும் வெளியிட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவை தொடர்பான உத்தேச வரைவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் இது தொடர்பான அனுமதி பெற்றுக்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (எ)

## அனர்த்தத்திற்குப் பின்னரான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்



நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணிக்கும் செயற்றிட்டத்தை துரிதமாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். ஜனாதிபதியின் கீழ் செயற்படும் நிறுவனமான தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவால் வீடுகளை நிர்மாணிப்பதற்கு 500 கோடி ரூபா வழங்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அனர்த்தத்துக்குப் பின்னரான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

## அமைச்சர் அமரதுங்கவுக்கு எதிராக முறைப்பாடு பதிவு!



கொழும்பு, ஜூன் 15

தவறான வார்த்தைப் பிரயோகத்துடன் அச்சுறுத்தல் விடுத்தார் எனத் தெரிவித்து கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜோன் அமரதுங்கவால் அச்சுறுத்தப்பட்டவர் எனக் கூறப்படும் ஊடகவியலாளர் பெனட் பேர்டினன்டஸ் இந்த முறைப்பாட்டை நேற்று முன்தினம் செய்துள்ளார்.

முத்துராஜவல பகுதியில் குப்பை கூழங்களைச் சேர்த்தல் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு, அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் கந்தானை பிரதேசக் கட்சி அலுவலகத்தில் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது.

ஏற்கனவே, அந்தப் பகுதியில் குப்பைகளை குவித்த விவகாரத்தில் அமைச்சர் மீது பிரதேச மக்கள் அதிருப்தியாகியிருந்தனர். இந்த நிலையில் சந்திப்பின் பின்னர் அங்கிருந்து திரும்பிய அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எவ்வாறு அதே பிரதேசத்தில் குப்பை களைச் சேர்க்க முடியும் என்று கேள்வி எழுப்பினர்.

இதற்குக் கேள்வி எழுப்பிய ஊடகவியலாளரான பெனட் பேர்டினன் டஸை அமைச்சர் திட்டியமையோடு, பகிரங்கமாக அச்சுறுத்தல் விடுத்தார் என்றும் கூறப்படுகின்றது.

மேலும், அந்தக் கட்சி அலுவலகத்திலிருந்து ஊடகவியலாளர் வெளியேற்றப்பட்டார். இதனைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் இடம்பெற்ற தினமேபேலியகொட பொலிஸ் நிலையத்தில் குறித்த ஊடகவியலாளர் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும், இதுதொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எவரும் எடுக்காத நிலையில் ஊடகவியலாளர் பெனட் பேர்டினன்டஸ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவுசெய்திருந்தார்.

# பிளாஸ்ரிக் குப்பைகளின் மீள் சுழற்சி மூலம் டீசல்!



இலங்கையில் சேகரிக்கப்படும் பிளாஸ்ரிக் குப்பைகளை மீள்சுழற்சி செய்வதன் மூலம் டீசல் தயாரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக விசேட இயந்திரம் ஜப்பானிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த இயந்திரம் அனுராதபுரத்தில் பொருத்தப்பட்டுள்ள நிலையில் அதன் முதற்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்த இயந்திரத்தின் மூலம் பிளாஸ்ரிக் கழிவுகளை மீள் சுழற்சி செய்து டீசல் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேஷல ஜயரத்ன ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன் போது மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக அந்த இயந்திரம் ஜப்பானிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வட மத்திய மாகாண முதலமைச்சரின் தலைமையில் அந்த இயந்திரம் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட முதலமைச்சர்-

கொழும்பு நகரில் சேகரிக்கப்படும் அனைத்துக் குப்பைகளும் மீதொட்ட முல்லையில் கொட்டுவதை தவிர, மாற்று நடவடிக்கை ஒன்று இருக்கவில்லை. அண்மையில் குப்பை மேட்டில் ஏற்பட்ட விபத்துக்கு முன்னர் மாற்று நடவடிக்கை தொடர்பில் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை நகரங்களில் சேகரிக்கப்படும் குப்பைகள், பிளாஸ்ரிக், பொலித்தீன் ஆகியவைகள் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் மீள்சுழற்சி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோன்று வெகு விரைவில் நகரத்தில் சேகரிக்கப்படும் பிளாஸ்ரிக் குப்பைகளில் டீசல் தயாரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கான இயந்திரங்கள் ஜப்பானிலிருந்து கொண்டு வருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது'-என்றார்.

## சீனிக்கான இறக்குமதி வரி அதிகரிப்பால் நுகர்வோருக்கு எந்தவித பாதிப்பும் இல்லை

### இறக்குமதியாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனிக்கு அரசு வரி அதிகரித்ததால் நுகர்வோருக்கு எந்தவிதப் பாதிப்பையும் அது ஏற்படுத்தாது என்று சீனி இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பி.எம்.அபேசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, இறக்குமதிக்கான வரி அதிகரிக்கப்பட்ட போதிலும் பேக்கரி தயாரிப்புகளின் விலையை அதிகரித்து நுகர்வோரை சிரமத்துக்கு உள்ளாக்குவதில்லை என்று அகில இலங்கை பேக்கரி தயாரிப்பாளர்களின் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

பேக்கரி தயாரிப்புகளின் விலை அதிகரிக்கப்படுவதாக பிரசாரங்களை முன்னெடுப்பதன் மூலம் அரசுக்கு நெருக்கடி நிலைமையை ஏற்படுத்த வேண்டாம்.- என்றார். (எ)

# அ.தி.மு.க. இரு அணிகளும் மீண்டும் இணைய வேண்டும்!

சென்னை,ஜூன் 15

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. இரு அணிகளும் மீண்டும் இணைய வேண்டும் என்று பிரதமர் மோடி விருப்பம் தெரிவித்துள்ளார்.

-இவ்வாறு அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணித் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் டில்லி சென்று பிரதமர் மோடியைச் சந்தித்த போது தமிழக அரசியல் பற்றி விரிவாகப் பேசினேன். அப்போது பிரதமர் மோடி, 'தமிழ்நாட்டில் அ.தி.மு.க. இரு அணிகளும் மீண்டும் இணைய வேண்டும். அ.தி.மு.க. இரு அணிகளும் இணைந்தால்தான் வலுவான, நிலையான ஆட்சியைக் கொடுக்க முடியும். அ.தி.மு.க. ஆட்சி ஊழலற்ற ஆட்சியாக இருக்க வேண்டும். எத்தகைய சூழ்நிலையிலும் அ.தி.மு.க. ஆட்சியில் ஊழல் நடந்து விடக்கூடாது; அதில் கவனமாக இருங்கள்'- என்றார். இந்த விடயத்தில் அவர் குரல் மிகவும் உறுதியாக இருந்தது.



## பிரதமர் மோடியின் விருப்பமும் அதுவே என்கிறார் பன்னீர்

அ.தி.மு.க. இரு அணிகளுக்கும் இடையிலும் பல்வேறு கருத்து வேறுபாடுகள் உள்ளன. அவற்றைப் பேசித் தீர்த்து விடலாம் என்று நாங்கள் நினைத்தோம்.

ஆனால், அந்த அணியினரின் பேச்சுகளும், செயற்பாடுகளும் எங்களுக்கு போதுமான அளவுக்கு நம்பிக்கையைத் தரவில்லை. அ.தி.மு.க. அம்மா அணியினர் தொடக்கத்தில் இருந்தே எங்களை ஏமாற்ற முயன்றனர். கட்சிக்குத் தீராத களங்கத்தை ஏற்படுத்த அவர்கள் முயல்கின்றமையை நாங்கள் உணர்ந்தோம். எனவேதான் இணைப்பு நடைபெறவில்லை.

தற்போது சட்டசபை உறுப்பினர் சரவணனின் காணொலிக் காட்சிகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. கூவத்தூரில் சிறை வைக்கப்பட்டிருந்த போது அவர் தப்பி வந்து இங்கு வந்து சேர்ந்தார். தொலைக்காட்சியில் ஒளிபரப்பான அவரது உரையாடல் பற்றி அவர் விளக்கம் அளித்துள்ளார். எந்த ஓர் அரசியல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரோ, சட்டசபை உறுப்பினரோ அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்பதே எங்கள் நிலைப்பாடு. பணப் பேரத்தில் யார் ஈடுபட்டாலும் குற்றம் தான். எங்கள் அணியில் உள்ள யாரும் பணப் பேரத்தில் ஈடுபடவில்லை.

அ.தி.மு.க. இரு அணிகளாகப் பிளவுபட்டாலும் தொண்டர்கள் சோர்வடைந்துவிடவில்லை. ஒரு தொண்டன்கூட அ.தி.மு.கவில் இருந்து விலகி வேறு கட்சிக்குச் சென்று விடவில்லை.

இதன்மூலம் அ.தி.மு.க. வலிமையான இயக்கம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான ஆட்சியில் எமக்குத் திருப்தி இல்லை. மக்கள் மத்தியிலும் அத்தகைய மன நிலைதான் உள்ளது. - என்றார்.

## "உள்ளாடையுடன் நிகழ்ச்சி நடத்து!"- என்று கூறிய இஸ்லாமிய மதகுருவுக்கு தொகுப்பாளினி பதிலடி!

இணைய தளத்தில் பெண் பிரபலங்கள் அணிகின்ற உடைகள் troll 'ட்ரோல்' செய்யப்படுகின்றமை (கலாய்க்கின்றமை) தொடர்பில் மும்பையில் அமைந்துள்ள Mirror Now என்ற தொலைக்காட்சியில் விவாத நிகழ்ச்சி நடந்தது. இதில் பங்கேற்ற இஸ்லாமிய மதகுருவான மௌலானா யூசுப் அபாஸ் என்பவர், தொகுப்பாளரான பெண்மணியை நோக்கி "நீ உள்ளாடை (மட்டும்) அணிந்து கொண்டு வந்து விவாதம் செய். ஆண்களுக்கு நிகராகி விடுவாய்; சமத்துவம் ஏற்பட்டு விடும்'' என்று கலாய்க்கும் விதத்தில் தெரிவித்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக பேசிய தொகுப்பாளர் ஃபயே டிசௌசா, ''அவர் கூறிய கருத்தால் நான் ஆவேசமடைவேன் என கருதியிருப்பார். நான் நிலை தடுமாறி வேலையை ஒழுங்காகச் செய்ய மாட்டேன் என நினைக்கிறார். உங்களைப் போன்று பலரையும் பார்த்துள்ளேன், சனா ஃபாத்திமா, சானியா மிர்சா மற்றும் பல பெண்கள் தங்கள் வேலையைச் செய்கிறார்கள். அவர்களின் உடைகளையும் அவர்களையும் விமர்சித்தால், நடுங்கிப் போய் சமையலறைக்குள் ஓடி விடுவார்கள் என நினைக்கும் ஆண்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த உலகில் நீங்கள் மட்டுமே ஆட்சி செய்ய அனுமதிக்க மாட்டோம், நாங்கள் எங்கும் ஓடி விட மாட்டோம்''- எனப் பதிலடி கொடுத்துள்ளார்.



பெண்கள் மீதான பாலியல் தாக்குதலுக்கு முதல் காரணமாக அவர்களது ஆடைகள் தான் குறை கூறுவார்கள்.

இதுமட்டுமல்லாது நடிகைகள் முதற் கொண்டு பெண்களின் ஆடைகள் தொடர்பில் இணையதளத்தில் troll 'ட்ரோல்' செய்யப்படுவது தற்போது அதிகரித்துள்ளது. சமீபத்தில்கூட மோடியை சந்தித்த பிரியங்கா சோப்ராவின் உடை, ரம்ழான் மாதத்தில் நடிகையின் நீச்சல் உடை, கிரிக்கட் வீரர் முஹமது ஷமியின் மனைவியின் உடை எனப் பல விடயங்கள் 'ட்ரோல்' செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜெயாவைக் கொன்றது சசி குடும்பமே!

### தீபா தெரிவிப்பு



''என் அத்தை ஜெயலலிதாவை கொலை செய்தமை உண்மைதான். இதன் பின்னணியில் சசி கலா குடும்பம் இருக் கிறது. ஆதாரங்களைத் தகுந்த நேரம் வரும் போது வெளியிடுவேன்.''

-இவ்வாறு ஜெயலலிதாவின் அண்ணன் மகளும், எம்.ஜி.ஆர். அம்மா தீபா பேரவையின் பொதுச் செயலாளருமான தீபா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

''ஜெயலலிதாவை கொலை செய்த விவகாரத்தில் தீபக்கும் சேர்ந்து கூட்டுச்சதி செய்துள்ளார். போயஸ் இல்லத்தில் நான் வாழ்ந்திருக்கிறேன். ஜெயலலிதா வாழ்ந்து மறைந்த இல்லத்தை நினைவு இல்லமாக மாற்ற எனக்கு விருப்பமில்லை. அதை நான் அனுமதிக்க மாட்டேன். அத்தை வாழ்ந்த வீடு கோவில் போல மதிக்கப்பட வேண்டும்'' -என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பணப் பேர விவகாரம்: சட்டசபையில் அமளி; தி.மு.கவினர் சாலை மறியல்! ஸ்டாலின் கைது!!

பணப் பேர விவகாரம் தொடர்பில் வெளியான காணொலி தொடர்பாக சட்டப்பேரவையில் கவனவீர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்க வேண்டும் என்ற தி.மு.கவினரின் கோரிக்கையை, சபாநாயகர் நிராகரித்தார். இதனால் சட்டப் பேரவையில் தி.மு.கவினர் அமளியில் ஈடுபட்டனர்.



இதனை அடுத்து, சட்ட சபையில் இருந்து மு.க. ஸ்டாலின் வெளியேற்றப்பட்டார். இதனால் சட்டசபை வளாகத்துக்கு முன் தி.மு.கவினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதன்போது, மறியலில் ஈடுபட்ட மு.க. ஸ்டாலின் உட்பட தி.மு.க. எம்.எல்.ஏக்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

அ.தி.மு.கவில் சசிகலா அணியில் இருந்து பன்னீர் அணிக்கு எம்.எல்.ஏக்கள் மாறுகின்றமையைத் தடுக்க, கோடிக் கணக் கில் பேரம் பேசப்பட்டது எனத் தனியார் ஆங்கில தொலைக்காட்சி ஒன்றில் காணொலி வெளியானது. அதில், பன்னீர் அணிக்கு மாறிய மதுரை தெற்கு தொகுதி எம். எல்.ஏ. சரவணன் உரையாற்றும் காட்சிகள் இடம்பெற்றிருந்தன. இது தமிழகம் மட்டுமன்றி தேசிய அரசியலையும் பரபரப்பாக்கியது.

இந்நிலையில், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்காக தமிழக சட்டப் பேரவை நேற்றுப் புதன்கிழமை கூடியது. இதன்போதே மேற்படி கோரிக்கையை தி.மு.க. விடுத்தது.


சபாநாயகர் மறுப்பு

தி.மு.கவினரின் கோரிக்கையை ஏற்க சபாநாயகர் ப.தனபால் மறுப்புத் தெரிவித்துப் பேசுகையில் - ''வீடியோ விவகாரம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றது. அது தொடர்பில் சபையில் விவாதிக்க முடியாது. மேலும், சம்பந்தப்பட்ட உறுப்பினர் சரவணனே குற்றச்சாட்டை மறுத்து விளக்கமளித்துள்ளார். பத்திரிகை, தொலைக்காட்சிகளில் வரும் செய்திகளை எல்லாம் விவாதிக்க முடியாது. கூவத்தூர் பேரம் பேசல் தொடர்பாக ஆதாரம் கொடுத்தால் விவாதிக்க அனுமதியளிக்கிறேன்'' - என சபாநாயகர் தெரிவித்தார்.

ஆனால், இதை தி.மு.கவினர் ஏற்றுக் கொள்ளவில்லை. காவிரி பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் நீதிமன்றத்தில் இருந்த போதும் சபையில் விவாதிக்கப்பட்டிருக்கிறது - என்றனர். சபாநாயகர் குறுக்கிட்டு அமைதி காக்குமாறு கோரியும் தி.மு.கவினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். அமளியில் ஈடுபட்டுவந்த தி.மு.கழக எம்.எல்.ஏக்கள் திடீரென 'எம்.எல்.ஏக்கள் விற்பனைக்கு' என்ற பதாகைகளுடன் கோஷமிட்டனர். இதனால் சபையில் கடும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. சபாநாயகர் உத்தரவின் பேரில் சட்டசபையில் இருந்து எதிர்க் கட்சி தலைவர் மு.க. ஸ்டாலின், துரைமுருகன் ஆகியோரும் பின்னர் தி.மு.க. எம்.எல்.ஏக்களும் வெளியேற்றப்பட்டனர்.

# லண்டன் அடுக்குமாடிக் கட்டடத்தில் தீ விபத்து: இதுவரையில் 6 பேர் உயிரிழப்பு; 50 பேர் காயம்!







லண்டன், ஜூன் 15

மேற்கு லண்டன், கென் சிங்டன் வடக்குப்பகுதியில் அமைந்துள்ள கிரென்பெல் அடுக்கு மாடிக் கட்டடத்தில் நேற்றுப் புதன்கிழமை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி இதுவரையில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 50 பேர்வரை மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பலர் சாவடைந்திருக்கலாம் என அச்சம்

விபத்துக்குள்ளான கட்டடத்துக்குள் பலர் சிக்குண்டு உள்ளனர்.

இதனால், உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

பலர் தீக்காயங்களுக்கு உள்ளாகி உள்ளனர். சிலர் மூச்சுத் திணறலினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், மீட்பு நடவடிக்கைகளும், தீயணைப்புச் செயற்பாடுகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்குள்ளான 27 மாடிக் கட்டடத்தில் 120 குடியிருப்புகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முழுக் கட்டடத்திலும் தீ வேகமாகப் பரவி வருகின்றமையால், இந்தக் கட்டடம் இடிந்து விழும் அபாயம் காணப்படுகிறது என பி.பி.ஸி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# வட கொரியாவின் நட்பு நாடுகள் மீது பொருளாதாரத் தடை!

## அமெ. இராஜாங்க செயலாளர் ரெக்ஸ் எச்சரிக்கை

வடகொரியாவுடன் சட்டவிரோத வணிக செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் நாடுகளுக்கு எதிராக, மிக விரைவில் பொருளாதாரத் தடை விதிக்கப்படும்.

இது தொடர்பில் வெள்ளை மாளிகை விரைவில் தீர்மானிக்க உள்ளது என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ரெக்ஸ் டில்லர்சன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க செனட் சபையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வெளியுறவுக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாடுகளின் எதிர்ப்புகளை மீறி அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை சோதனைத் திட்டங்களைமேற்கொண்டு வரும் வடகொரியா மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் தொடர்ந்து அழுத்தங்களை மேற்கொண்டு வருகின்றது.

வடகொரிய தலைவர் கிம் ஜொங் உன், அமெரிக்காவின் பிரதான நிலப் பரப்புகளைத் தாக்கும் வகையிலான கண்டம் விட்டுக் கண்டம் பாயும்



ஏவுகணைகளைத் தயாரிக்கும் முயற்சியில் மிகத்தீவிரமாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மெக்சிக்கோ சியாபாஸ் மாநிலத்தில் 7 ரிச்டர் அளவில் நிலநடுக்கம்!




மெக்சிக்கோ நாட்டின் சியாபாஸ் மாநிலத்தில் உள்ள கடல்பகுதியில் நேற்றுப் புதன் கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 7 அலகுகளாகப் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தை அடுத்து, சுனாமி எச்சரிக்கை ஏதும் வெளியாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# பங்களாதேஷில் தொடர் மழையால் மண் சரிவு: உயிரிழந்தோர் எண்ணிக்கை 130 ஆக உயர்வு!

டாக்கா, ஜூன் 15

பங்களாதேஷில் பருவ மழைகாரணமாகப் பெய்து வரும் தொடர் மழையால் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி, உயிரிழந்தோரின் எண்ணிக்கை 130 ஆக உயர்ந்துள்ளது; நூற்றுக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்; பலரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது:

மேலும், ரங்கமதி, பந்தர்பன், சிட்டகாங், டாக்கா உள்ளிட்ட மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.



இதில் இந்திய எல்லையை ஒட்டியுள்ள மலைப் பாங்கான ரங்கமதி மாவட்டம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. ஏழைகள் பழங்குடியின மக் கள் அதிகம் வசிக்கும் இந்த மாவட்டத்தில் பெருமளவில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

பல இடங்களில் தொலைத் தொடர்பு வசதி துண்டிக்கப்பட்டுள்ளன. தொடர் மழை காரணமாக மேற்படி பகுதிகளுக்கு மீட்புக் குழுவினர் சென்றடைவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதனால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் உயரலாம் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீட்புப்பணிக்கு இராணுவமும் வரவழைக்கப்பட்டுள்ளது. கனமழையால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 18 தங்குமிடங்களை அதிகாரிகள் அமைத்துள்ளனர். இந்த மாவட்டங்களில் இருந்து 4 ஆயிரத்து 500 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக் நிவாரண முகாமில் வசிக்கும் 800 பேருக்கு வாந்தி, மயக்கம்!



ஈராக் நிவாரண முகாமில் வழங்கப்பட்ட பழுதடைந்த உணவை உட்கொண்ட 800 பேர் வாந்தி மற்றும் மயக்கம் என்பனவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசம் இருந்த மொசூல் நகரம் இராணுவத்தால் படிப்படியாக மீட்கப்பட்டு வருகிறது. அமெரிக்க கூட்டுப்படையின் உதவியுடன் ஈராக் இராணுவம் கடுமையான தாக்குதல் நடத்தி வருகிறது.


எனவே, அங்கு தங்கியிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டு ஐ.நா. அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அங்கு தங்கியிருக்கும் மக்களுக்கு ஒரு தனியார் அமைப்பின் மூலம் விருந்து வழங்கப்பட்டது. உணவை உட்கொண்ட சிறிது நேரத்தில் சுமார் 800 பேருக்கு வாந்தி மற்றும் மயக்கம் ஏற்பட்டது.

வழங்கப்பட்ட உணவு பழுதடைந்திருந்தமையே இதற்குக் காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)



# இந்தியாவின் தங்க மங்கை உஷாவுக்கு டாக்டர் பட்டம்



பெண் தடகள வீராங்கனைகளுக்கெல்லாம் முன்மாதிரியாகத்திகழ்ந்தவரும், இந்திய மக்களின் மனங்களில் இடம் பெற்றவருமான ஓட்ட வீராங்கனை கேரளாவைச் சேர்ந்த பி.டி. உஷா. சர்வ தேச அளவில் தட, கள போட்டிகளில் பல்வேறு பதக்கங்களை வென்று சாதனை படைத்த பி.டி. உஷாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க ஐ.ஐ.டி. கான்பூர் முடிவுசெய்துள்ளது.

பலதுறைகளில் பெரும்சாதனைகளை நிகழ்த்தி முன்மாதிரியாகத் திகழ்ந்து, அந்தத் துறையின் வளர்ச்சிக்காகப் பங்காற்றியவர்களுக்காக கௌரவ டாக்டர் பட்டம் வழங்குவது வழக்கம்.

அதன்படி, தடகளவிளையாட்டுகளில் இந்தியாவுக்குப் பெருமை சேர்த்த தங்க மங்கை பி.டி.உஷாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க ஐ.ஐ.டி. கான்பூர் முடிவுசெய்துள்ளது.

இன்றும் , நாளையும் ஐ.ஐ.டி. கான்பூரின் 50 ஆவது பட்டமளிப்பு விழா நடக்கவிருக்கிறது. இதில், இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கலந்து கொண்டு பி.டி. உஷாவுக்கு நாளை கௌரவ டாக்டர் பட்டம் வழங்க இருக்கிறார். இது இவருக்குக் கிடைக்கும் 2ஆவது டாக்டர் பட்டமாகும். இதற்கு முன்னதாக கடந்த 2002 ஆம் ஆண்டு கன்னூர் பல்கலைக்கழகம் பிடி உஷாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

2020 டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய இளம் இளைஞர்களை பங்கேற்கச் செய்யும் வகையில் அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, தேசிய விளையாட்டு அபிவிருத்தி நிதியிலிருந்து ரூ.8.5 கோடி செலவில் கோழிக்கோடு அருகில் உள்ள கிணலூரில் கட்டப்பட்ட உஷா தடகளப் பள்ளியை பிரதமர் மோடி வீடியோ கொன்பரன்சிங் மூலம் தொடங்கி வைக்க இருக்கின்றார் என்ற தகவலும் வெளியாகி உள்ளது.

சர்வதேச அளவில் தடகளப் போட்டிகளில் பல்வேறு பதக்கங்களை வென்று சாதனை படைத்த பி.டி. உஷா, இந்திய தடகளங்களின் அரசி, இந்தியாவின் தங்க மங்கை, பய்யொலி எக்ஸ்பிரஸ் என்றெல்லாம் வர்ணிக்கப் பட்டவர்.

## இந்தோனேஷிய பட்மிண்டன் தொடரில்

# இந்தியாவின் சாய்னா, சிந்து முன்னேற்றம்



இந்தோனேஷிய திறந்த சிறப்பு பட்மிண்டன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில் விளையாட, இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நெஹ்வால் தகுதி பெற்றுள்ளார்.

முதல் சுற்றில் தாய்லாந்தின் ரட்சனோக் இன்டனானுடன் நேற்றுமுன்தினம் மோதிய சாய்னா 17:21 என்ற கணக்கில் முதல் செட்டை இழந்து பின்தங்கினார்.

கடும் போராட்டமாக அமைந்த 2 ஆவது செட்டில் சாய்னா 21:18 என வெற்றி பெற சமநிலை ஏற்பட்டது. அதே வேகத்துடன் 3ஆவது மற்றும் கடைசி செட் டில் அதிரடியாக விளையாடி புள்ளிகளைக் குவித்த அவர் 17:21, 21:18, 21:12 என்ற செட் கணக்கில் வென்று 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்தோனோஷிய ஓபனில் சாய்னா 3 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சாய்னா 2 ஆவது சுற்றில் தாய்லாந்தின் நிட்சவோன் ஜிண்டபோலுடன் மோதுகிறார்.

மற்றொரு முதல் சுற்றில் களமிறங்கிய இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 21:12, 21:19 என்ற நேர் செட்களில் தாய்லாந்தின் போர்ன்பவீ சோசுவோங்கை வீழ்த்தினார். அவர் தனது 2ஆவது சுற்றில் அமெரிக்காவின் பெய்வன் ஸாங்கை எதிர்கொள்கிறார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் களமிறங்கிய இந்தியாவின் சுமீத் ரெட்டி - அஷ்வினி பொன்னப்பா ஜோடி 12:21, 9:21 என்ற நேர் செட்களில் இந்தோனோஷியாவின் இர்பான் பதிலா - வெனி ஆங்ரெய்னி ஜோடியிடம் தோற்று வெளியேறியது. (உ)

## ஆசியக் கிண்ண உதைபந்தாட்டம்:

# தகுதிச் சுற்றில் கிர்கிஸ்தானை வீழ்த்தி இந்தியா முன்னிலை





ஆசிய உதைபந்தாட்டப் போட்டி 2019 ஆம் ஆண்டு எமிரேட்ஸில் இடம்பெற உள்ளது. இதற்கான தகுதி சுற்றுப் போட்டி பல்வேறு நாடுகளில் நடந்து வருகிறது. இதில் 3ஆவது சுற்றில் பங்கேற்றுள்ள 24 அணிகள் 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இதில் ஒவ்வொரு அணியும்தங்கள்பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் உள்ளூர், வெளியூர் அடிப்படையில் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் ஆசியப் போட்டிக்குத் தகுதி பெறும்.

'ஏ' பிரிவில் இடம் பெற்றுள்ளஇந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் மியான்மரை வீழ்த்தி இருந்தது. இந்த நிலையில், பெங்களூரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த ஆட்டத்தில் இந்திய அணி கிர்கிஸ்தானை எதிர்கொண்டது.

விறுவிறுப்பான இந்த மோதலில் இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. வெற்றிக்குரிய கோலை 69 ஆவது நிமிடத்தில் இந்திய அணித்தலைவர் சுனில் சேத்ரி அடித்தார்.

இதன் மூலம் இந்தியா தனது பிரிவில் 6 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறது. இந்தியா அடுத்து மக்காவ் அணியுடன் செப்ரெம்பர் 5 ஆம் திகதி மோதுகிறது. (உ)

# பந்து வீச்சில் தாமதம் பாகிஸ்தானுக்கு அபராதம்

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் இலங்கைக்கு எதிராகக் கடந்த திங்களன்று நடந்த கடைசி லீக் ஆட்டத்தின்போது தாமதமாக பந்துவீசியதாகக் கூறி பாகிஸ்தான் அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பந்துவீச்சுக்கு என ஒதுக்கப்பட்ட நேரத்தை கடந்த வகையில் பாகிஸ்தான் பந்து வீசியதாக போட்டி நடுவர்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தனர். அதனடிப்படையில், ஐ.சி.சி. போட்டி நடுவர் குழுவின் கிறிஸ் பிராட் இந்த அபராதத்தை விதித்துள்ளார். இதன்படி, பாகிஸ்தான் அணியின் வீரர்களுக்கான போட்டி ஊதியத்தில் 10 சதவீதமும், அணித்தலைவர் சர்ஃப்ராஸ் அகமதுவின் ஊதியத்தில் 20 சதவீதமும் அபராதமாக விதிக்கப் பட்டுள்ளது.



இதனிடையே, பாகிஸ்தான் அணித்தலைவர் சர்ஃப்ராஸ் இந்தத் தவறை ஒப்புக் கொண்டமையை அடுத்து, தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப் படவில்லை.

சம்பியன்ஸ்கிண்ண அடுத்த ஆட்டங்களில் பாகிஸ்தான் அணி இதே தவறை செய்யும் பட்சத்தில், அணித்தலைவர் சர்ஃப்ராஸ் அகமதுக்கு ஒரு ஆட்டத்தில் விளையாடத் தடை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.



சம்பியன்ஸ் கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களையும், தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 76 ஓட்டங்களையும் விளாசியமையை அடுத்து கோஹ்லி இந்த ஏற்றம் கண்டுள்ளார்.

# ஐ.சி.சி. ஒரு நாள் தரவரிசை:

# முதலிடம் மீண்டார் கோஹ்லி!

ஐ.சி.யின் ஒருநாள் போட்டிக்கானதரவரிசைப்பட்டியலில், துடுப்பாட்ட வீரர்கள் பிரிவில் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் லீக் ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில், புதிய பட்டியலை ஐ.சி.சி. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டது.

இதன்படி, துடுப்பாட்ட வீரர்கள்பிரிவில் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி 862 புள்ளிகளுடன் மீண்டும் முதலிடத்துக்கு வந்துள்ளார். சம்பியன்ஸ் கிண்ணம் தொடங்கும்போது இந்தப் பட்டியலில் கோஹ்லி 3 ஆவது இடத்தில் இருந்தார். தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் முதலிடத்திலும், ஆஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் 2ஆவது இடத்திலும் இருந்தனர்.

சம்பியன்ஸ் கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களையும், தென்னாபிரிக்காவுக்குஎதிராகஆட்டமிழக்காமல் 76 ஓட்டங்களையும் விளாசியமையை அடுத்து கோஹ்லி இந்த ஏற்றம் கண்டுள்ளார்.

இதேபோல், இந்தியாவின் தொடக்க வீரர் ஷிகர் தவான் 5 இடங்கள் ஏற்றம் கண்டு 10 ஆவது இடத்துக்கு வந்துள்ளார். இந்நிலையில், அணியின் சக வீரர்களான ரோஹித் சர்மா 13 ஆவது இடத்துக்கும், தோனி 14 ஆவது இடத்துக்கும் பின்தங்கினர். இருவரும் தலா ஓர் இடம் கீழிறங்கியுள்ளனர். யுவராஜ் சிங் 6 இடங்கள் முன்னேறி 88 ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

**பந்துவீச்சு**

பந்துவீச்சாளர்களுக்கான பட்டியலில், இந்திய வேகப் பந்துவீச்சாளர் புவனேஸ்வர் குமார் 13 இடங்கள் முன்னேற்றம் கண்டு 23 ஆவது இடத்துக்குவந்துள்ளார். உமேஷ் யாவத் 2 இடங்கள் முன்னேறி 41 ஆவது இடத்துக்கும், ஜஸ்பிரீத் பும்ரா 3 இடங்கள் முன்னேறி 43 ஆவது இடத்துக்கும் வந்துள்ளனர்.

எனினும், இந்திய சுழற் பந்து வீச்சாளர்கள் சற்றுப் பின்னடைவைச் சந்தித்துள்ளனர். இதில் அஸ்வின் 2 இடங்கள் பின்தங்கி 20 ஆவது இடத்திலும், ரவீந்திர ஜடேஜா 3 இடங்கள் பின்தங்கி 29 ஆவது இடத்திலும் உள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் ஜோஷ் ஹேஸில்வுட், பந்துவீச்சாளர்கள் பட்டியலில் முதல் முறையாக முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்து அணியினரைப் பொறுத்த வரையில், துடுப்பாட்ட வீரர் பட்டியலில் ஜோ ரூட் ஓரிடம் முன்னேறி 4 ஆவது இடத்துக்கும், பென்ஸ் டோக்ஸ் 9 இடங்கள் முன்னேறி முதல் முறையாக 20 ஆவது இடத்துக்கும் வந்துள்ளனர்.

பந்துவீச்சாளர்கள் வரிசையில், லியாம் பிளங்கெட் 7 இடங்கள் முன்னேறி முதல் முறையாக 9 ஆவது இடத்துக்கு வந்துள்ளார். அதில் ரஷீத் 9 இடங்கள் முன்னேறி 11 ஆவது இடத்தில் உள்ளார்.

**பல்துறை வல்லுநர்:**

பல்துறை வல்லுநர் பட்டியலில் முதல் 5 இடங்களில் மாற்றம் இல்லை. பென் ஸ்டோக்ஸ் ஓரிடம் முன்னேற்றம் கண்டு 6ஆவது இடத்துக்கு வந்துள்ளார். ஜடேஜா 3இடங்கள்முன்னேறி8ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

**இந்தியாவுக்கு வாய்ப்பு**

ஐ.சி.சி. ஒரு நாள் போட்டித் தரவரிசையில் முதல் 5 இடங்களில்முறையே தென்னாபிரிக்கா (119 புள்ளி), ஆஸ்திரேலியா (117 புள்ளி), இந்தியா (117 புள்ளி), இங்கிலாந்து (114 புள்ளி), நியூஸிலாந்து (111 புள்ளி) ஆகியன உள்ளன. இந்திய அணி மீண்டும் 'நம்பர் ஒன்' அரியணையில் ஏறுவதற்கு வாய்ப்பு உருவாகியுள்ளது.

அதற்கு இந்திய அணி சம்பியன்ஸ் கிண்ண அரை இறுதியில் வங்காளதேசத்தை வீழ்த்தி இறுதிப்போட்டியில் இங்கிலாந்தை எதிர்கொள்ள வேண்டும். அதில் பட்டம் வென்றால் புள்ளி எண்ணிக்கை 11[illegible]-ஆக உயரும். அப்போது மயிரிழையில் இந்திய அணி தென்னாபிரிக்காவை முந்தும். மாறாக அரைஇறுதியில் வங்காளதேசத்தை வீழ்த்தி இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை தோற்கடிக்க நேர்ந்தால் இந்திய அணி நூலிழை வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை விட பின் தங்கி நிற்கும்.

**பட்டியலில் முன்னணிக்கு வர இந்தியாவுக்கும் வாய்ப்பு**

## நோர்வே சதுரங்கத்தில் இந்திய வீரர் ஆனந்துக்கு முதலாவது வெற்றி!



நோர்வே செஸ் தொடரில் இந்திய வீரர் ஆனந்த், முதல் வெற்றியைப் பதிவு செய்தார்.

'உலக சம்பியன்' நோர்வேயின் கார்ல்சன், நெதர்லாந்தின் அனிஷ் கிரி, இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் உள்ளிட்ட உலகின் 'டொப்-10' நட்சத்திரங்கள் மட்டும் பங்கேற்கும் நோர்வே செஸ் தொடர் ஸ்டாவன்ஜர் நகரில் நடக்கிறது.

இதன் ஆறாவது சுற்றில் இந்தியாவின் ஆனந்த், இத்தாலியின் பேபியானோ காருணாவைச் சந்தித்தார்.

இதில் கறுப்பு நிறக் காய்களுடன் களமிறங்கிய ஆனந்த், தொடக்கத்தில் இருந்தே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். காருணா செய்த சில தவறுகளும் சாதகமாக அமைய, போட்டியின் 47 ஆவது நகர்த்தலில் ஆனந்த் வெற்றி பெற்றார்.

ஆறு சுற்று முடிவில் ஒரு வெற்றி, 3 'டிரா', 2 தோல்வியுடன் 2 புள்ளிகள் பெற்ற ஆனந்த், 7ஆவது இடத்தில் உள்ளார். முதல் இரு இடத்தில் அமெரிக்காவின் ஹிகாரு நகமுரா (4 புள்ளி), ஆர்மேனியாவின் லெவான் ஆரோனியன் (4) உள்ளனர்.

## இன்று அரையிறுயில் இந்தியா— பங்களாதேஷ்



இங்கிலாந்தில் நடந்து வரும் 8 ஆவது சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியில் அரையிறுதிக்கு நடப்பு சம்பியன் இந்தியா, இங்கிலாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய அணிகள் தகுதி பெற்றன.

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, இலங்கை ஆகிய அணிகள் வெளியேற்றப்பட்டன.

நேற்றுமாலை கார்டிப்பில் நடந்த முதல் அரையிறுதி போட்டியில் இங்கிலாந்து - பாகிஸ் தான் அணிகள் மோதின.

பர்கிங்காமில் இன்று நடக்கும் 2 ஆவது அரை இறுதியில் 'பி' பிரிவில் முதலிடம் பிடித்த நடப்பு சம்பியன் இந்தியா 'ஏ' பிரிவில் 2 ஆம் இடம் பிடித்த பங்களாதேஷ் ஆகியன பலப்பரீட்சை நடத்துகின்றன.

விராட் கோஹ்லி தலைமையில் இந்தியா துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்துத்துறைகளிலும் சம பலத்துடன் திகழ்கிறது. ரோகித் சர்மா, ஷிகர் தவான், விராட் கோஹ்லி, யுவ ராஜ்சிங், தோனி ஆகியோர் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். பந்து வீச்சில் புவனேஸ்வர் குமார், பும்ரா, ஜடேஜா, அஸ்வின் ஆகிய சிறந்த வீரர்கள் உள்ளனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் இந்தியா வீரர்களின் களத்தடுப்பு அபாரமாக இருந்தது. அந்த உத்வேகத்தை நாளையும் தொடர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தொடரில் அதிக ஓட்ட வீரரான ஷிகர் தவான் உள்ளார். அவர் 3 ஆட்டத்தில் 271 ஓட்டங்களை எடுத்துள்ளார். ஒரு சதம், 2 அரைச்சதம் அடித்து உள்ளார். ரோகித் சர்மா 181 ஓட்டங்களும், விராட் கோஹ்லி 157 ஓட்டங்களும் எடுத்திருக்கிறார்கள்.

இதனால் இந்தியாவின் துடுப்பாட்டம் மிகவும் பலம் வாய்ந்ததாக இருக்கிறது. சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இதுவரை 3 முறை இறுதிப்போட்டிக்கு முன்னேறி உள்ளது.

இதில் 2000ஆம் ஆண்டு நியூஸிலாந்திடம் தோற்றுக் கிண்ணத்தை இழந்தது. 2002 ஆம் ஆண்டு இலங்கையுடன் கிண்ணத்தைப் பகிர்ந்து கொண்டது. 2013 ஆம் ஆண்டு இந்தியா சம்பியன் பட்டத்தை(இங்கிலாந்தை வீழ்த்தியது) வென்றது. 4 ஆவது முறையாக இறுதிப் போட்டியில் அடியெடுத்து வைக்கும் ஆர்வத்தில் இருக்கிறது.

## மாங்குளத்தில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்ட அடிப்படையில் விருத்தி செய்யப்படவிருப்பதாகவும், அதன் மூலம் ஐம்பதாயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிட்டும்என்றும்சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து அலுவல்கள்அமைச்சர்டிஎம்.சுவாமிநாதன் தெரிவித்திருக்கின்றார்.

அண்மையில்ஜனாதிபதிதலைமையில் நடைபெற்ற யாழ். மாவட்டக்குழுக் கூட்டத்தில் வடக்கு மக்களின் வேலை வாய்ப்புப் பிரச்சினை குறித்து ஆராயப்பட்ட போதே இந்தத்தகவலை அமைச்சர் சுவாமிநாதன் வெளியிட்டார் என அவரது அமைச்சின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

முதலீட்டுச் சபையின் இணக்கத்துடன்பலவெளிநாட்டுமுதலீட்டாளர்கள் இந்தப் பொருளாதார வலயத்தில் முதலீடு செய்வதற்கு இணக்கத்தைத் தெரிவித்துத்தயாராகிவருகின்றனர்என்று குறிப்பிட்ட அமைச்சர், சுற்றுச்சூழல் சார்பு முறையில் சர்வதேச நியமனங்களுக்கு அமைவாக இந்த வலயம் அமைக்கப்படும் என்றும் சொன்னார்.

வடக்கு மக்களின் தெளிவான எதிர்காலத்துக்கு வழிகாட்டும் இந்தத் திட்டத்துக்கு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தங்களின் அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கிவைத்துவிட்டுஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## முதல்வரின்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று மாகாண எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராஜா 'காலைக் கதிருக்குத் தெரிவித்தார்.

விசாரணை அறிக்கை வந்ததுமே - பத்துத் தினங்களுக்கு முன்னரே -இரண்டு அமைச்சர்களையும் பதவி விலகும்படி கோரியிருந்தேன். இப்போதுதான் அதனை முதல்வர் செய்திருக்கின்றார். அதுசரியானதுதான்.

வடமாகாண சபையின் ஏனைய இரு அமைச்சர்கள் தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என முதல்வர் கூறியிருக்கின்றமையை நாங்கள் வரவேற்கின்றோம்.

ஆனால், சம்பந்தப்பட்ட இரு அமைச்சர்கள் மீதான விசாரணையை மேற்கொள்வதற்காக அவர்களை ஒரு மாதம் விடுமுறையில் இருக்குமாறு முதலமைச்சர் கூறுவது ஏற்கத்தக்கதல்ல.

அவ்வாறாயின் ஏற்கனவே குற்றச்சாட்டுச்சுமத்தப்பட்டுநிரூபிக்கப்பட்டுள்ள இரு அமைச்சர்கள் மீதான விசாரணையின் போது ஏன் அவர்களை விடுமுறையில் இருக்குமாறு முதலமைச்சர் கோரவில்லை என்ற கேள்வியெழுகிறது.

அரசமைப்பின் படி அமைச்சர்கள் விடுமுறையில் இருந்தாலும் அவர்களே அமைச் சுக்குப் பொறுப்பானவர்களாவார்கள். ஆகவே, அவர்களைஅமைச்சுப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு விசாரணையை நடத்துவதே சரியானது.

மாறாகச் சம்பந்தப்பட்ட இரு அமைச்சர்களையும் ஒருமாதம் விடுமுறையிலிருக்குமாறும் அதுவரை அவர்களின் அமைச்சுப் பொறுப்புக்களைத் தான் கவனிப்பதாகவும் முதலமைச்சர்குறிப்பிட்டிருப்பதுமுரண்பட்ட கருத்தாகவுள்ளது.

அவ்வாறு செயற்படுவதற்கு முதலமைச்சருக்கு அதிகாரமில்லை. சம்பந்தப்பட்டஅமைச்சர்களை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கினால் மாத்திரமே அவர்அந்தஅமைச்சுப்பொறுப்புக்களைத் தன்வசம் வைத்திருப்பதற்கானஅதிகாரமுள்ளது.

ஆகவே, முதலமைச்சரின் இவ்வாறானநடவடிக்கைதொடர்பில்போதுமானதெளிவின்மை காணப்படுகிறது.- என்றார் தவராசா.

## முதல்வரின் முடிவு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்கள் தொடர்பான விவகாரத்தில் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் எடுத்திருக்கும் காத்திரமான நடவடிக்கையை எமது கட்சி வரவேற்கின்றது.

தமிழ்த் தேசியத்தின் பெயரால்ஊழலும்அதிகார அடாவடித்தனமும் அரங்கேறுவதை அனுமதிக்க முடியாது என்பதை முதலமைச்சர் துணிச்சலும் நிதானமும்கொண்டநடவடிக்கைஊடாக திட்டவட்டமாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அவரது இந்தநடவடிக்கைக்கு எமது பூரண ஆதரவு உறுதியாக உண்டு.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## அறிக்கை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னம் நேற்றுக் கூறியுள்ளார்.

வடமாகாண அமைச்சர்கள் மீது முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிப்பதற்கான விசாரணைகுழு அறிக்கை தொடர்பாக உறுப்பினர்களின் கருத்தறியும் அமர்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அவை தலைவர் சி.வீ.கே. சிவஞானம்அமைச்சர்கள்மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்வதற்காக 5 அமர்வுகளை நடத்துவதற்கு 20 லட்சம் ரூபா வரை செலவிடப்பட்டுள்ளது எனக் கூறினார்.

## ஐங்கரநேசன்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பிலும் விசாரணை நடைபெற்ற முறைமை மற்றும் விசாரணைக்குழுவின் தீர்மானம்எடுக்கப்பட்டவிதம்போன்றவற்றைவிளக்கி அவற்றில் உள்ள தவறுகளை விலாவாரியாகஎடுத்துரைத்தார்.

நீண்டஅந்தத்தன்னிலைவிளக்கத்தின் ஒரு பகுதி வருமாறு :-

விசாரணை அறிக்கையில் நான்கையூட்டுப்பெற்றேன்என்றோ, ஊழல் புரிந்தேன் என்றோ, நிதி மோசடிகளில்ஈடுபட்டேன்என்றோ விசாரணை குழுவினர் எங்கும் குறிப்பிடவில்லை. அவர்கள் மட்டுமல்ல, எவராலுமே இவ்வாறு குறிப்பிட முடியாது. இந்த இழிசெயலில், அமைச்சராகப் பணி புரியும் இக் காலப்பகுதியிலோ அல்லது அரசியலுக்கு வர முன்னரோ கூட நான் ஈடுபட்டவனல்லன். வருங்காலத்தில்சோற்றுக்குவழியின்றித்தவிக்கும்ஒரு நிலை வந்தாலும் கூட இவ்வீனச் செயலில் நான் ஈடுபடப் போவதில்லை. ஆனால், நான் இத்தகையவன் என்ற ஒரு மாயத் தோற்றத்தை, என் பற்றிய தவறான ஒரு விம்பத்தை, பொதுமக்களிடையே ஏற்படுத்தி எனது அரசியல் வாழ்க்கையை முடிவுறுத்தும்விதமாகஇந்தஅறிக்கை அமைந்துள்ளதென்பதைவருத்தத்தோடு பதிவு செய்கிறேன்.

இந்த அறிக்கையில் விசாரணையின்போதுநானும்திணைக்கள அதிகாரிகள் பலரும் தெரிவித்த பல விடயங்கள் கருத்தில் எடுக்கப்படவில்லை. நான்தெரிவித்தேன் என்று, நான்தெரிவிக்காத பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன;பிழையானவிடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. மோசடி, ஊழல், கையூட்டு, நிதிவிரயம் போன்ற சொற்களுக் கான அர்த்தச்செறிவுகள்வெவ்வேறானவை. ஆனால், இந்த அறிக்கையைமேலோட்டமாகப்படிப்பவர்கள்தவறானமுடிவுக்குவரும் விதமாகஇச்சொற்களைமனம்போன போக்கில் பயன் படுத்திவிட்டு, என்னைப் பதவி விலக வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவற்றின்மூலம் விசாரணைக்குழுவில் உள்ள சிலர் எப்படியாவது என்னைக் குற்றவாளியாக்கிவிடவேண்டும் என்ற முன்கூட்டிய முடிவுடன், ஏதோ ஒருசூழ்ச்சிநிரலில்செயற்பட்டுள்ளார்கள் என்றே நான் கருதுகின்றேன்.-என்றார் அவர்.

## குற்றம்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சுமந்திரனும் சிந்திக்க வேண்டுமெனக் கோரியுள்ளார் கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சியான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

வடமாகாணசபையில்அமைச்சர்களுக்கு எதிராக முதலமைச்சர் எடுத்துள்ள முடிவுகள், அதன் தொடர்ச்சியாக முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை முயற்சி ஆகியன தொடர்பாக அவர் கருத்து வெளியிட்டார். அப்போது அவர் கூறியவை வருமாறு :-

விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டு, அக்குழு இரு அமைச்சர்களுக்கெதிராக நடவடிக்கைஎடுக்கவும்பரிந்துரைத்திருக்கின்றது. அத்துடன், ஏனைய இரு அமைச்சர்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள்முன்வைக்கப்பட்டமையையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களைமுன்வைத்து விசாரணையை வலியுறுத்தியதில்தமிழரசுக்கட்சியேமுன்னின்றது.

தற்போது தமது கட்சி சார்ந்தவர்களைப் பாதுகாக்க அது கூக்குரலிடுகின்றது. அதிலும், அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கிராமம் கிராமமாகப் போய் பிரசாரம் செய்கின்றார்.

உண்மையில் தமிழ் மக்கள் இவர்களுக்கு வாக்களித்தது குற்றவாளிகளையும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும் காப்பாற்றவா? - என அவர் கேள்வி எழுப்பினர். (உ)

## எதிர்பார்க்கப்பட்ட...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ஐங்கரநேசன் தன்னிலை விளக்கமளித்தார்.

அதற்குப் பதிலளிக்கத் தமக்கு வாய்ப்பளிக்கப்படவேண்டும் எனக் கோரினார் எதிர்க் கட்சித் தலைவர் தவராசா.

சபை முதல்வர் சி.வீ.கே.சிவஞானம்அதற்குஅனுமதிவழங்க மறுத்ததும் எதிர்க்கட்சித் தலைவர் வெளி நடப்புச் செய்தார்.

அதனோடு வெளிநடப்பு நடவடிக்கை ஆரம்பமானது.

தவராசா வெளிநடப்புச் செய்த பின்னர் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தாம் எழுதிக் கொண்டு வந்திருந்த உரையைப் படிக்க முயன்றார்.

அதனைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ஆட்சேபித்தனர். அதனையும்மீறிமுதலமைச்சர்தமது உரையைத் தொடர முயன்றார்.

அதையடுத்து தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் 13 பேர் சபையை விட்டு வெளிநடப்புச்செய்தனர். எஞ்சியோர் சபையில் இருந்தனர்.

இந்த நிலையில் முதல்வர் தமது உரையை ஆற்றி முடித்தார். அத்தோடு அமர்வு முடிவுக்கு வந்தது. (உ)

## பெரும்பான்மையை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கடிதங்கள் தொடர்பில் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என்று கேட்டபோது -

"கடிதம் கிடைத்திருக்கின்றது. பெற்றுக் கொண்டுள்ளேன். அப்படி ஒரு கடிதம் கிடைத்திருக்கின்றமை குறித்து முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்துவேன். உரிய பெரும்பான்மையைக் கடிதம் தந்த தரப்பு நிறைவு செய்யுமானால், இத்தகைய கடிதம் எனக்குக் கிடைத்திருக்கின்றமையால் இந்த விடயம் தொடர்பில்உங்களின்பெரும்பான்மையைச்சபையில் நிரூபிக்க வேண்டிய தேவை எழுந்திருக்கின்றது என்று முதல்வருக்குச் சுட்டிக்காட்டி அதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுவேன்.

"அந்தச் செயற்பாட்டைப் பொறுத்து அதன் பின்னர் நிலைமையைப் பார்த்து முடிவு செய்யவேண்டியிருக்கும்." - என்றார் ஆளுநர். (உ)

## அடுத்த ...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

இந்தவிடயம்குறித்துஆராய்வதற்காக கட்சியின் செயலாளரும் கிழக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சருமான ரி. துரை ராஜசிங்கம் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருக்கின்றார் என்றும் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

"நானும் கட்சிச் செயலாளரும் இன்று (வியாழனன்று) யாழ்ப்பாணத்தில் கூடிப் பேசுவோம். கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தனுடனும் ஏனைய கட்சிப் பிரமுகர்களுடனும் கலந்துரையாடுவோம். தற்போதைய சூழ்நிலையில் பொருத்தமான ஒருவரை முதல்வராகத் தேர்ந்தெடுத்துஅதனைஆளுநருக்கு எழுத்து மூலம் அறிவிப்போம். பெரும்பாலும் இன்று வியாழன் மாலைக்குள் இது பற்றிய ஒருதீர்மானம்எட்டப்படும்." - என்று மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தார். (உ)

## ரெலோவின் ...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குவரத்து அமைச்சர் ப.டெனீஸ்வரன், முதல்வருக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினருடன் சேர்ந்திருக்கின்றார்.

முதல்வர் மீது நம்பிக்கையீனம் தெரிவிக்கும் கடிதத்தில் அவரும் ஒப்பமிட்டுள்ளார்.

முதல்வர் மீது நம்பிக்கையீனம்தெரிவிக்கும்கடிதம்நேற்று ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்ட போது இலங்கைத் தமிழரசுக் கட்சியினருடன் அவரும் சென்றிருந்தார். (உ)

## சிவஞானமா?...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள்நேற்று மாலை தொடக்கம் பல சுற்றுக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தனர்.

"மாவை. சேனாதிராசா கட்சியின் மூத்த பிரமுகர் என்ற முறையில்தற்போதைய அவைத்தலைவர்சி.வீ.கே. சிவஞானத்தைவிரும்புகின்றார். அவருக்கு முன்னுரிமை அளிப்பதையே அவர் வரவேற்கின்றார்." - என்று தமிழரசுக்கட்சியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம், கட்சிப் பிரமுகரும், எம்.பியுமான சுமந்திரனும் மற்றும் சயந்தன், ஆர்னோல்ட், சுகிர்தன் போன்ற சபை உறுப்பினர்களும் டாக்டர் சத்தியலிங்கம் முதல்வராகின்றமையையும், சிவஞானம் அவைத் தலைவராக நீடிக்கின்றமையையும் விரும்புகின்றனர் என்று கூறப்பட்டது. அதற்கு ஒரு காரணமும் சொல்லப்பட்டது.

அடுத்த முதல்வராக சி.வீ.கே.சிவஞானம் அறிவிக்கப்பட்டால், அவர் அவைத் தலைவர் பதவியை உடன் துறக்க வேண்டியவராவார்.

இந்தச்சூழலில்தற்போதைய முதல்வர் விக்னேஸ்வரன் தனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும், பதவியை விட்டு நீங்க மறுத்து, அடம் பிடித்தால், அந்தப் பிரேரணையைச் சபையில்நிறைவேற்றிமுடிக்கக் கூடியதாகச்சபைநடவடிக்கையை ஒப்பேற்ற வேண்டும். அவையின் தலைவர் அதற்கு முக்கியம். அவரை அடுத்த முதல்வர் பதவிக்குப் பிரேரித்து, அவைத் தலைவர் பதவியை வெற்றிடமாக்கினால், அந்தப் பிரேரணையை வெற்றிகரமாகநிறைவேற்றுவது பாதிக்கப்படலாம் என அத்தரப்புகள் சுட்டிக் காட்டுகின்றன.

எனவே, விக்னேஸ்வரனைப் பதவி விலக்கும் வரை சிவஞானத்தை அவைத் தலைவராக வைத்திருக்க வேண்டும் என அத்தரப்புகள் வலியுறுத்துகின்றனவாம். (உ)

## கட்டாய ...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்புகள்பற்றியவிடயங்களில்தேர்ந்ததரப்புகள்'காலைக் கதிரு'க்குத் தெரிவித்தன.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் ஆகியோரை ஒரு மாதகட்டாயவிடுமுறையில்தாம் அனுப்புகின்றார் என்றும் -

அவர்களதுபணிகளைத்தாம் கையாளுவார் என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் விடுத்திருக்கும் பணிப்புரை குறித்து கருத்துவெளியிட்ட போதே அந்தத் தரப்பு இவ்வாறு தெரிவித்தன.

இந்தக் கருத்தை நேற்று முதல்வர்மீதுதமக்குநம்பிக்கையில்லை எனத் தெரிவிக்கும் கடிதத்தைஆளுநரிடம்இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் ஒப்படைத்த சமயம் ஆளுநரும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துரைத்தார்.

ஓர்அமைச்சரை முதலமைச்சர் பதவி விலக்கலாம். அவரை கட்டாய விடுமுறையில் அனுப்பவே முடியாது என்ற கருத்தை ஆளுநர் குறிப்பிடுகின்றமை காணொலியாக நேற்றிரவு இணையத் தளங்களில் வலம் வந்தது.

இரு அமைச்சர்களைத்தாம் விடுமுறையில்அனுப்புகின்றார் என்றும் -

விடுமுறைக் கடிதங்களை அவர்கள் தம்மிடம் இன்று மதியத்துக்கு முன் தரவேண்டும் என்றும் -

முதலமைச்சர் விடுத்த அறிவிப்பு சட்ட செல்லுபடியற்ற உத்தரவு. அந்தஉத்தரவுசெயற்படுத்தக்கூடிய சட்டவலுவற்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## கட்சி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னொருவரை அப்பதவிக்கு அக்கட்சிச்செயலாளர்முன்மொழிந்து ஆளுநருக்குக் கடிதம் வழங்கலாமா, அப்படி வழங்கப்படும் கடிதத்தின் சட்ட செல்லுபடி எத்தகையது, அப்படி ஒரு கடிதம் வழங்கப்பட்டால் ஆளுநர் எத்தகைய முடிவை எடுப்பார் என்பன குறித்தெல்லாம் திட்டவட்டமான - முன்னுதாரணங்கள் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. பக்கம் 03 >>>

## விக்னேஸ்வரன் ...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் மீது தாங்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதைத் தெரிவிக்கும் தமது கடிதத்துடன்அதனைஉறுதிப்படுத்தும் சத்தியக்கடதாசிகளையும்அவர்கள் ஆளுநரிடம் ஒப்படைத்தனர்.

நேற்றிரவு 8.30 மணியளவில் ஆளுநரைச் சந்திப்பதற்கான அனுமதியை இக்குழுவினர்கேட்டனர். அந்தஅனுமதி வழங்கப்பட்டது. பக்கம் 03 >>>

## கடிதத்தில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சியோர் இன்று ஆளுநர் அலுவலகத்துக்கு வந்து தமது ஒப்பத்தை வைப்பார்கள் என்று கடிதத்தை ஒப்படைத்தோர் நேற்று ஆளுநரிடம் தெரிவித்தனர் என அறியவந்தது.

ஒப்பமிட்ட 15 பேரினதும் சத்தியக் கடதாசிகளும் அந்தக் கடிதத்துடன் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

இந்தக் கடிதத்தில் சி.வீ.கே. சிவஞானம், ரி.குருகுலராஜா, பசுபதிப்பிள்ளை, அரியரட்ணம், அஸ்மின், ஆனோல்ட், சயந்தன், டெனீஸ்வரன், சத்தியலிங்கம், கமலேஸ்வரன், சுகிர்தன், ஜெயதிலக, ஏ.எல்.வை.ஜவஹிர், அகிலதாஸ் ஆகியோர் ஒப்பமிட்டிருக்கின்றனர் என்று தெரியவருகின்றது.

தமிழரசுக் கட்சியின் மற்றொரு உறுப்பினரான தர்மலிங்கம் லண்டனில் இருக்கின்றார் எனத் தெரிவித்து அவரின் இசைவுக்கடிதமும்ஒப்படைக்கப்பட்டதாக அறியவந்தது.

வடக்கு மாகாண சபையில் மொத்தம் 38 உறுப்பினர்கள் உள்ளனர் ஆகவே, அரைவாசியான 19 இற்கும் அதிகமாக ஓர் உறுப்பினர் - அதாவது 20இற்

பக்கம் 03 >>>

# நாட்டின் தேசிய சொத்துக்கள் விற்பனை செய்யப்படமாட்டா!

## கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

நாட்டின் தேசிய சொத்துக்கள் வெளிநாட்டுக்கு விற்பனை செய்யப்படமாட்டா என்று தெரிவித்துள்ள கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சர் மஹிந்த அமரவீர, நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவின் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் காலை கூட்டு எதிரணி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன, தற்போதைய அரசு நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சிக்கிறது எனக் குற்றம் சாட்டினார். அவர் தனது குற்றச்சாட்டில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

டி.ஆர் விஜேவர்தன மாவத்தையில் காணப்படும் சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான காணியை இந்திய நிறுவனத்துக்கு விற்பனை செய்ய அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. புல்மோட்டை கனியவள படிமத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற வீதியில் உள்ள காணியையும் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கனிய வளத்தின் ஊடாக நாட்டுக்கு மிகப்பெரிய இலாபம் கிடைக்கின்றது. மிகப் பெரிய தேசிய சொத்தான அதனை விற்பனை செய்ய முயற்சித்தார்கள். எனினும், எதிர்ப்புகள் காரணமாக அதனை விற்பனை செய்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.-என்றார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மஹிந்த அமரவீர-


-கூட்டு எதிரணி தொடர்ச்சியாகப் பொய்யான தகவல்களை வெளியிட்டு வருகின்றது. அவ்வாறான ஒரு விடயத்துக்கு அமைச்சரவையில் அனுமதி பெறப்படவில்லை. அவர்கள் தினமும் இவ்வாறான பல கதைகளைக் கூறிக்கொண்டிருப்பார்கள். அம்பாந்தோட்டையை சீனாவுக்கு விற்பனை செய்யப் போவதாகக் கூறினார்கள்.



இப்படி பல கதைகளை அவர்கள் கூறிக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

நாட்டுக்கு எதிரான வகையில் நாட்டின் நிலத்தை வேறு ஒரு நாட்டுக்கு விற்பனை செய்ய நாம் இடமளிக்கப் போவது இல்லை. 90 இற்கும் மேற்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் வந்தன. எனினும், இவ்வாறானதோர் அமைச்சரவைப் பத்திரம் வரவில்லை. -என்றார். (எ)

## நாளை மின் தடை



உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை-

காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில் வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, மருதபுரம், வியாவில், கருங் காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத் திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

## குருநகர்ப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர்-II பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி (ஏ. ஆர். வி.) போடப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன்படி, இன்று வியாழக்கிழமை -

★ காலை 9 மணி முதல் 11 மணி வரை - கச்சேரி கிழக்கு ஒழுங்கை- சென் ஆன்ஸ் வீதி சந்தி.

★ முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை - கச்சேரி கிழக்கு ஒழுங்கை

★ பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4 மணிவரை காட்டுக்கந்தோர் கிழக்கு ஒழுங்கை

நாளை வெள்ளிக்கிழமை-

★ காலை 9 மணி முதல் 11 மணி வரை - நடமாடும் சேவை குருநகர் II பகுதி

★ முற்பகல் 11 மணி முதல் ஒரு மணிவரை -நடமாடும் சேவை குருநகர் II பகுதி

★ பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணிவரை- நடமாடும் சேவை குருநகர் II பகுதி

## சதிசெய்வோர் குறித்து விசாரணை நடத்துக!

### கிரியெல்ல வேண்டுகோள்



கொழும்பு, ஜூன் 15

மஹிந்த அணியினரான கூட்டு எதிரணியினர் அரசுக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் மேற் கொண்டு வரும் சதித் திட்டங்கள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொது எதிரணியைச் சேர்ந்த சுமார் 40 உறுப்பினர்கள் பல்வேறு சமூக வலைத்தளங்கள் மூலம் அரசின் மீது சேறு பூசி வருகின்றனர். இது நன்றாகத் திட்டமிடப்பட்டு செய்யப்படும் ஒரு சதிவேலையாகும்.

இந்தச் சதியின் மூலம் இன்றைய அரசின் இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் முறுகலை ஏற்படுத்தி குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க அவர்கள் முயற்சி செய்து வருகின்றனர்.

அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களின் பின்பு அரசின் மீது சேறு பூசும் எதிரணியினரின் சதிகள் அதிகரித்துள்ளன. அவர்களது மறைமுகமான சதித்திட்டங்கள் பற்றி மக்கள் நன்கு புரிந்து வைத்துள்ளார்கள்.- என்றார். (எ)

# மாகாண சபைகளின் இணைப்புக்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்!

## சுதந்திரக்கட்சி இளைஞரணி வலியுறுத்து

கொழும்பு, ஜூன்.15

புதிய அரசமைப்பின் ஊடாக பௌத்த மதத்துக்கான முன்னுரிமை, ஒற்றையாட்சி மற்றும் இணைக்க முடியாத மாகாண சபைகள் ஆகிய மூன்று விடயங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணி வலியுறுத்தியுள்ளது.

கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே இளைஞர் அணியின் தலைவர் சாந்த பண்டார இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

9 மாகாண சபைகளும் சுயாதீனமாக இயங்குவதற்கான ஏற்பாடுகள் அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மாகாணங்கள் தற்போது செயற்படுகின்றமை போலவே சுயாதீனமாகச் செயற்பட வேண்டும். எந்தத் தேவைக்காகவும் மாகாண சபைகள் இணைக்கப்படக்கூடா. எனவே, மாகாண சபைகள் இணைக்கப்பட முடியாத வகையில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

ஒற்றையாட்சி என்ற விடயமும் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதேபோல் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இந்த மூன்று விடயங்களும் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பிரிக்கப்படாத நாடு, நிலையான அபிவிருத்தி மற்றும் தூய்மையான அரசியல் கலாசாரம் ஆகிய மூன்று விடயங்களும் யாப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்த நாடு மதம், மொழி அல்லது இனத்தின் அடிப்படையில் பிரிவடைவதில் எமக்கு விருப்பமில்லை. ஆகவே, புதிய அரசமைப்பின் ஊடாக பிளவடையாத நாடு என்ற விடயம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.-என்றார். (எ)




# அனர்த்த நிவாரணப் பணிகளுக்கு நிபுணர்களுடன் அமெ. விமானம்!

## பசுபிக் கட்டளைப்பீடத்திலிருந்து விரைவில் கொழும்புக்கு

இலங்கையில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனிதாபிமான உதவிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் இராணுவ விமானம் ஒன்று, நிபுணர்களுடன் கொழும்பு வரவுள்ளது.

கடந்த மாதம் இலங்கையில் ஏற்பட்ட பெருவெள்ளம் மற்றும் நிலச்சரிவினால், 300 பேர் வரை உயிரிழந்தனர். பெருமளவில் அழிவுகளை ஏற்படுத்திய இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதவிப் பணிகளை மேற்கொள்வதற்காக அமெரிக்கக் கடற்படையின் ஏவுகணைப் போர்க் கப்பலான யு.எஸ்.எஸ். லேக் எரி கடந்த 11ஆம் திகதி கொழும்புத் துறைமுகம் வந்துள்ளது.

இந்தக் கப்பலில் வந்துள்ள அமெரிக்கக் கடற்படையினர், இலங்கைக் கடற்படையின் மரைன் படைப்பிரிவினருடன் இணைந்து, காலி, மாத்தறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு வாரங்கள் இலங்கையில் தங்கியிருந்து இவர்கள் இந்தப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

இந்த நிலையில், பசுபிக் கட்டளைப் பீடம் அனர்த்த உதவிப் பணிகளுக்காக இராணுவ விமானம் ஒன்றையும், நிபுணர்களையும் விரைவில் கொழும்புக்கு அனுப்பவுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கையுடன் அமெரிக்கா இணைந்து நிற்கிறது என்று அமெரிக்காவின் பசுபிக் கட்டளைத் தளபதி அட்மிரல் ஹரி ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

மீட்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள இலங்கைப் படையினருடன் அமெரிக்கப் படைகள் ஒருங்கிணைந்து ஆதரவளிக்கும். அமெரிக்காவின் ஏனைய அமைப்புகளுடன் இணைந்து நாம் செயற்படுவோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

(எ)

### ரத்துபஸ்வல மக்கள் மீது சூடு:

# கைதான பிரிகேடியரின் விளக்க மறியல் நீடிப்பு

## செய்தியாளருக்கும் அழைப்பாணை

சுத்தமான குடிதண்ணீர் வேண்டி ஆர்ப்பாட்டம் நடத்திய ரத்துபஸ்வல பிரதேச மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு மூன்று பேரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நான்கு இராணுவத்தினரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா பிரதான நீதிவான் டி.ஏ.ருவான் பத்திரண நேற்று பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்தன உட்பட நான்கு பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

விசாரணையாளர்களுக்கு அவதூறு மற்றும் அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செய்தியை வெளியிட்டவர் எனக் கூறப்படும் செய்தியாளர் ஒருவரைக் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு அழைக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோரிக்கை விடுத்தனர்.

இதனடிப்படையில், குறித்த ஊடகவியலாளரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.




# ஜூலையில் வர்த்தமானி அறிவித்தல் வராவிட்டால் பாரிய போராட்டம்

## வேலையற்ற பட்டதாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

அரச வேலைவாய்ப்பை வழங்க வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பட்டதாரிகள் தமது கோரிக்கைகளை முன்வைத்து நாடு தழுவிய ரீதியில் பட்டதாரிகளை ஒன்றிணைத்துப் பாரிய போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர் என வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தொடர்ச்சியாகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளால் யாழ்.மாவட்ட செயலகத்தின் முன்பு மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டம் நேற்றுடன் 108ஆவது நாளாகத் தொடர்ந்தது.

தமது நடவடிக்கைகள் தொடர்பாக அவர்கள் மேலும் கூறுகையில் –

கடந்த திங்கட்கிழமை யாழ். வந்திருந்த ஜனாதிபதி, வருகின்ற மாதத்தின் முதல் வாரத்தில் அரச வர்த்தமானி ஊடாக வடக்கு, கிழக்கில் 2 ஆயிரம் பட்டதாரிகளை உள்ளீர்ப்பதற்கான அறிவித்தல் பிரசுரிக்கப்படலாம் என உறுதியளித்திருந்தார்.

வடக்கில் வேலையற்ற பட்டதாரிகளாக தற்போது 3ஆயிரம் பேர் உள்ளார்கள்.

ஜனாதிபதிகூறியமைபோன்று வடக்கில் 1000 பட்டதாரிகளை உள்ளீர்த்தால் மீதமுள்ள 2 ஆயிரம் பட்டதாரிகளில் வடக்கு மாகாண அரசின் கீழ் காணப்படும் வெற்றிடங்களுக்கும் கணிசமான தொகையினரை உள்ளீர்க்கலாம். அப்படிச் செய்தால் இப்பட்டதாரிகள் பிரச்சினையில் பெரும்பகுதியை நிவர்த்தி செய்ய முடியும்.

குறிப்பாக வடக்கு மாகாண அரசின் கீழ் ஆரம்ப கல்வி ஆசிரிய வெற்றிடங்கள், உயர் கல்வி ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவ்வெற்றிடங்களுக்குக் குறிப்பிட்ட தொகையினரை உள்ளீர்க்க மாகாண அரசிற்கு அதிகாரம் உண்டு.

ஜனாதிபதி உறுதியளித்தமை போன்று எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் பட்டதாரிகள் நியமனம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாவிட்டால் நாடு தழுவிய ரீதியில் உள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் உள்ளடக்கி யாழ்ப்பாணத்தில் பாரிய போராட்டமொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். - என்று தெரிவித்தனர். (உ)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் கனடாவில் கொலை! விசாரணைகள் தீவிரம்!!





கனடா, ஜூன் 15

கனடாவின் கேல்கரியில் இலங்கைத் தமிழர்களான தந்தை மற்றும் மகன் சடலமாக மீட்கப்பட்ட கொலைச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இலங்கையின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பு சந்திரபாபு (வயது 56) மற்றும் அவரது மகன் சந்திரபாபு பிரியந்தன் (வயது 25) ஆகிய இருவருமே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கேல்கரியின் Panorama Hills பகுதியில் உள்ள வீட்டில் கடந்த சனிக்கிழமைகாலை 5.15 மணியளவில் இருவரின் சடலம் மீட்கப்பட்டதாக கேல்கரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விசாரணையைத் தீவிரப்படுத்திய பொலிஸார், சம்பவ தினத்தன்று வீட்டில் பலர் கூடியிருந்த வேளை பயங்கர விவாதம் நடைபெற்றதாகத் தெரிவித்துள்ளனர்.

விவாதம் கைகலப்பாக மாறவே ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர் எனவும், இதில் படுகாயமடைந்த இருவருக்குத் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இந்த கொலை வழக்கில் சந்தேகப்படும் குற்றவாளியாகக் கருதப்படும் நபர், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர் இல்லை என்ற போதிலும், குடும்ப உறுப்பினர்களுக்குப் பரிச்சயமானவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, சம்பவத்தின் போது உடனிருந்த பெண் ஒருவரிடமும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இருவருடைய பிரேத பரிசோதனை நேற்று முன்தினம் நடத்தப்பட்ட போதிலும், இறப்புக்கான காரணத்தைப் பொலிஸார் வெளியிடவில்லை.

தம்பு சந்திரபாபு, சந்திரபாபு பிரியந்தன் ஆகிய இருவரும் டொரண்டோவில் இருந்து கேல்கரிக்கு குடியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# பதுளையில் தீயினால் கடை நாசம்





பதுளையில் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையமொன்றில் நேற்று பிற்பகல் தீ பரவியது. அதனால் அது முற்றாகச் சேதமடைந்தது.

பதுளை, முதியங்கன விகாரைக்கு பின்னால் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திலேயே நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீயினால் கடையுடன் அருகிலுள்ள வீடொன்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீயினால் வர்த்தக நிலையத்தில் உள்ள பொருள்கள் எரிந்து நாசமாகின.

# முன்னாள் புலனாய்வு அதிகாரியிடம் எட்டு மணி நேரம் விசாரணையாம்!

கொழும்பு, ஜூன் 15

வடக்கு, கிழக்கில் இயங்கும் கம்பி இணைப்பு தொலைக்காட்சி மற்றும் சில நிறுவனங்களின் மில்லியன் கணக்கான தொகையைத் தனது வங்கிக் கணக்கில் வைப்புச் செய்துள்ளார் எனக் கூறப்படும் முறைப்பாட்டுக்கு அமைய, தேசிய புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தா விதாரணவிடம் நேற்று 8 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு, ஹெந்தா விதாரணவிடம் இவ்விடயம் குறித்து விசாரணை நடத்தியது.

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் அறிவிப்புக்கு அமைய நேற்று முற்பகல் 9 மணிக்கு ஹெந்தா விதாரண விசாரணைக்குச் சென்றிருந்தார். மாலை 5.30 வரை விசாரணை நடத்தப்பட்டது.

பணச்சலவைச் சட்டத்தின் கீழ் இந்த விசாரணை நடத்தப்படுகிறது. அதேவேளை, கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நடந்த ஆள்கடத்தல் மற்றும் காணாமற்போக செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவும் கபில ஹெந்தா விதாரணவுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (உ)

# பிக்குவுக்கு தண்டம்

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் வழிமறிக்கப்பட்ட பிக்கு ஒருவருக்கு 2,500 ரூபாய் தண்டப்பணச்சீட்டு வழங்கப்பட்டதாக திரிப்பன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரத்தில் பொசன் நிகழ்வுக்காகச் சென்றுவரும் போது கடந்த 09 ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் குறித்த பிக்கு பிடிபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத ஒருவருக்கு வாகனத்தை வழங்கிய வாகன உரிமையாளருக்கு 3,500 ரூபாய் தண்டப்பணச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.